## 9th Science Lesson 22 Questions in Tamil

## 22] நுண்ணுயிரிகளின் உலகம்

1) கீழ்க்கண்டவற்றில் எது பாக்டீரியாவால் உருவாக்கப்படும் எதிர்பொருள் அல்ல?

A) ஸ்டெரெப்டோமைசின்

B) எரித்ரோமைசின்

C) பேசிட்ரசின்

**D) செபலோஸ்போரின்**

**விளக்கம்: பாக்டீரியாவால் உருவாக்கப்படும் எதிர்பொருள்:**

1. **ஸ்டெரெப்டோமைசின்**
2. **எரித்ரோமைசின்**
3. **பேசிட்ரசின்**

**பூஞ்சையால் உருவாக்கப்படும் எதிர்பொருள்:**

1. **பெனிசிலின்**
2. **செபலோஸ்போரின்**

2) முதன் முதலில் நுண்ணோக்கியை வடிவமைத்தவர் யார்?

**A) ஆன்டன் வான் லூவன்ஹக்**

B) இராபர்ட் ஹக்

C) இராபர்ட் பர்கின்ஜி

D) நியூட்டன்

**விளக்கம்: ஆன்டன் வான் லூவன்ஹக் என்ற நுண்ணுயிரிலாளர் முதன் முதலில் நுண்ணோக்கியை வடிவமைத்தார்.**

3) பாக்டீரியா பற்றிய கூற்றுகளில் தவறானது எது?

A) பெரும்பாலானவை ஒரு செல் உடையவை

B) உட்கரு மற்றும் பிற செல் நுண்ணுறுப்பு கிடையாது

C) சில இனங்கள் தளர்வாக இணைக்கப்பட்டுள்ள இழைகளைக் கொண்டு பெரியதாக உள்ளன.

**D) இவை யூகேரியோட் உயிரி ஆகும்**

**விளக்கம்: பெரும்பாலானவை ஒரு செல் உடையவை**

**உட்கரு மற்றும் பிற செல் நுண்ணுறுப்பு கிடையாது**

**சில இனங்கள் தளர்வாக இணைக்கப்பட்டுள்ள இழைகளைக் கொண்டு பெரியதாக உள்ளன.**

**இவை புரோகேரியோட் உயிரி ஆகும்.**

4) பாக்டீரியாக்களின் நீளம்________முதல்___________மைக்ரோ மீட்டருக்கும் குறைவாக வேறுபடுகின்றன

A) 1-5

**B) 1-10**

C) 0.2-1

D) 0.2-5

**விளக்கம்: பாக்டீரியாக்கள் நீளத்தில் 1 முதல் 10 மைக்ரோ மீட்டருக்கும் குறைவாக வேறுபடுகின்றன.**

5) பாக்டீரியாவின் இடப்பெயர்ச்சி உறுப்பு எது?

A) பொய்கால்கள்

**B) கசையிழை**

C) சீட்டா

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: பாக்டீரியாக்கள் இடம் பெயர்கின்றனவாகவும், இடம் பெயராதவையாகவும் காணப்படுகின்றன. சில பாக்டீரியங்கள் இடம் பெயர்ந்து செல்வதற்கு கசையிழை என்ற சிறப்பான அமைப்பு செல்லின் மேற்பரப்பில் காணப்படுகிறது. பாக்டீரியா இனங்களிடையே கசையிழைகளின் அமைவிடங்கள் மாறுபட்டுக் காணப்படுகின்றன.**

6) பாக்டீரியாவை வடிவத்தைப் பொறுத்து எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

A) 4

**B) 3**

C) 2

D) 5

**விளக்கம்: வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு பாக்டீரியங்களை கீழ்க்காணும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை,**

**1. கோள வடிவம்**

**2.கோல் வடிவம்**

**3. திருகு வடிவம்**

7) கோள வடிவத்தில் காணப்படும் பாக்டீரியங்கள்_____________என அழைக்கப்படுகின்றன

**A) காக்கைகள்**

B) பேசில்லைகள்

C) ஸ்பைரில்லா

D) ஸ்பைரில்லம்

**விளக்கம்: வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு பாக்டீரியங்கள் மூன்று வகைப்படும். அவற்றில் கோள வடிவத்தில் காணப்படும் பாக்டீரியங்கள் காக்கைகள் என அழைக்கப்படுகின்றன.**

8) பாக்டீரியா பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. பாக்டீரியா செல்லானது செல்சவ்வினைக் கொண்டுள்ளது.

2. இதில் லைசோசோம்கள் என்ற புரத உற்பத்திக்கான மையங்கள் காணப்படுகின்றன

3. இதில் சவ்வினால் சூழப்பட்ட உள்ளுறுப்புகள் காணப்படுகின்றன.

4. பிளாஸ்மிடுகள் என அழைக்கப்படும் சிறிய கூடுதலான வட்டமான குரோமோசோம் டி.என்.ஏ ஒன்று சைட்டோபிளாசத்தில் காணப்படுகிறது.

A) 1 மட்டும் தவறு

**B) 2 மட்டும் தவறு**

C) 3 மட்டும் தவறு

D) 4 மட்டும் தவறு

**விளக்கம்: 1. பாக்டீரியா செல்லானது செல்சவ்வினைக் கொண்டுள்ளது.**

**2. இதில் ரைபோசோம்கள் என்ற புரத உற்பத்திக்கான மையங்கள் காணப்படுகின்றன**

**3. இதில் சவ்வினால் சூழப்பட்ட உள்ளுறுப்புகள் காணப்படுகின்றன.**

**4. பிளாஸ்மிடுகள் என அழைக்கப்படும் சிறிய கூடுதலான வட்டமான குரோமோசோம் டி.என்.ஏ ஒன்று சைட்டோபிளாசத்தில் காணப்படுகிறது.**

9) வைரஸ் என்பது எம்மொழிச் சொல்?

A) கிரேக்கம்

**B) இலத்தீன்**

C) அரபு

D) சமஸ்கிருதம்

**விளக்கம்: வைரஸ் என்ற இலத்தீன் சொல்லானது நச்சு அல்லது விஷத்தன்மையுள்ள திரவம் என்று பொருள்படுகிறது. இவை செல்லற்ற தன்னைத்தானே பெருக்கிக் கொள்ளும் ஒட்டுண்ணியாகும்.**

10) கூற்று: பூஞ்சை ஒரு ஒட்டுண்ணி உணவூட்ட முறை கொண்டது.

காரணம்: இவற்றில் பச்சையம் கிடையாது

**A) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம்**

B) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

C) கூற்று சரி, காரணம் தவறு

D) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**விளக்கம்: பூஞ்சைகள் பச்சையமற்ற உயிரினமாகும். எனவே அவை உயிருள்ள அல்லது உயிரற்ற ஓம்புயிரிகளை தங்களது உணவுத்தேவைக்காக சார்ந்து வாழ்கின்றன. எனவே பூஞ்சை ஒரு ஒட்டுண்ணிகளாகும்.**

11) வைரஸ்கள் எத்தனை வகைப்படும்?

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: வைரஸ்கள் இரண்டு வகைப்படும். அவை,**

**1. தாவர வைரஸ்கள்**

**2. விலங்கு வைரஸ்கள்**

12) எந்த ஆண்டு ஆன்டன் வான் லூவன்ஹுக் முதன் முதலில் நுண்ணோக்கியை வடிவமைத்தார்?

**A) 1647**

B) 1664

C) 1665

D) 1676

**விளக்கம்: ஆன்டன் வான் லூவன்ஹுக் என்ற நுண்ணுயிரியலார் முதன்முதலில் நுண்ணோக்கியை 1647-ல் வடிவமைத்தார். அவர் தனது பல்லிலிருந்து சிதைவுற்ற பகுதியை எடுத்து அதை நுண்ணோக்கியின் உதவியுடன் உற்றுநோக்கினார்.**

13) தாவர செல்களில் உட்புகுந்து அத்தாவரங்களுக்கு நோயினை உண்டாக்கும் வைரஸ் எது?

A) ஸ்பைரில்லம்

B) பேசில்லஸ்

C) வீரியம்

**D) மேற்கண்ட எதுவுமில்லை**

**விளக்கம்: வைரஸிலுள்ள புரத உறையற்ற தீங்களிக்கும் ஆர்.என்.ஏ.வே வீராய்டு எனப்படும். இவை தாவர செல்களில் உட்புகுந்து அத்தாவரங்களுக்கு நோயினை உண்டாக்குகின்றன.**

14) கூற்றுகளை ஆராய்க.

1. உயிருள்ள ஓம்புயிரிகளில் வாழும் பூஞ்சைகள் சாறுண்ணிகள் எனப்படும்.

2. உயிரற்ற இறந்து போன கரிமப் பொருள்களில் வாழும் பூஞ்சைகள் ஒட்டுண்ணிகள் எனப்படும்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

**D) இரண்டும் தவறு**

**விளக்கம்: 1. உயிருள்ள ஓம்புயிரிகளில் வாழும் பூஞ்சைகள் ஒட்டுண்ணிகள் எனப்படும்**

**2. உயிரற்ற இறந்து போன கரிமப் பொருள்களில் வாழும் பூஞ்சைகள சாறுண்ணிகள் எனப்படும்.**

15) பூஞ்சைகளின் உடலம்____________என அழைக்கப்படுகிறது.

A) மைலஸ்

B) ஈஸ்ட்

**C) தாலஸ்**

D) பீரியான்கள்

**விளக்கம்: பூஞ்கைளின் உடலம் தாலஸ் என அழைக்கப்படுகிறது. பூஞ்சைகள் பச்சையமற்ற உயிரினமாகும். இவை ஒட்டுண்ணிகளாகவோ அல்லது சாறுண்ணிகளாகவோ வாழ்கின்றன.**

16) கூற்றுகளை ஆராய்க.

1. வைரஸ்கள் செல் அமைப்புள்ள, தன்னைத்தானே பெருக்கிக்கொள்ளும் ஒட்டுண்ணிகளாகும்.

2. வைரஸ்கள் உயிருள்ள மற்றும் உயிரற்ற பண்புகளை வெளிப்படுத்துகின்றன.

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. வைரஸ்கள் செல் அமைப்பற்ற, தன்னைத்தானே பெருக்கிக்கொள்ளும் ஒட்டுண்ணிகளாகும்.**

**2. வைரஸ்கள் உயிருள்ள மற்றும் உயிரற்ற பண்புகளை வெளிப்படுத்துகின்றன.**

17) ஒரு மைக்ரோ மீட்டர் என்பது?

A) $10^{-3}$மீ

**B) $10^{-6}$மீ**

C) $10^{-9}$மீ

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: ஒரு மைக்ரோ மீட்டர் என்பது $10^{-6}$ மீட்டர் ஆகும்.**

**$10^{-3}$– மில்லிமீட்டர்**

**$10^{-9}$ – நானோ மீட்டர்**

18) பாக்டீரியாக்களின் அகலம்____________முதல்________________மைக்ரோ மீட்டர் ஆகும்

A) 1–5

B) 1–10

**C) 0.2–1**

D) 0.2–5

**விளக்கம்: பாக்டீரியாக்கள் அகலத்தில் 0.2 முதல் 1 மைக்ரோ மீட்டருக்கும் குறைவாக வேறுபடுகின்றன.**

19) கூற்று: பூஞ்சைகள் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயர்வதில்லை

காரணம்: பூஞ்சைகள் ஒரு கசையிழையற்றவை

**A) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம்**

B) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

C) கூற்று சரி, காரணம் தவறு

D) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**விளக்கம்: பூஞ்சைகளில் கசையிழை காணப்படாததால் இவை இடம்பெயர்வதில்லை. வைரஸ்களில் கசையிழை காணப்படுகிறது.**

20) கூற்றுகளை ஆராய்க.

1. பாக்டீரிய செல்சவ்வனாது உறுதியான செல்சுவரால் மூடப்பட்டுக் காணப்படுகிறது.

2. பாக்டீரியாவில் பிளாஸ்மா படலமானது, சைட்டோபிளாசத்தையும், தெளிவான உட்கருவினையும் கொண்டுள்ளது.

**A) 1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு 6

**விளக்கம்: 1. பாக்டீரிய செல்சவ்வனாது உறுதியான செல்சுவரால் மூடப்பட்டுக் காணப்படுகிறது.**

**2. பாக்டீரியாவில் பிளாஸ்மா படலமானது, சைட்டோபிளாசத்தையும், தெளிவற்ற உட்கருவினையும் கொண்டுள்ளது.**

21) கோல் வடிவத்தில் காணப்படும் பாக்டீரியங்கள்___________________என அழைக்கப்படுகின்றன

A) காக்கைகள்

**B) பேசில்லைகள்**

C) ஸ்பைரில்லா

D) ஸ்பைரில்லம்

**விளக்கம்: வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு பாக்டீரியங்கள் மூன்று வகைப்படும். அவற்றில் கோல் வடிவத்தில் காணப்படும் பாக்டீரிய்ங்கள் பேசில்லைகள் என அழைக்கப்படுகின்றன.**

22) வைரஸ்–ன் உருவ அளவு பரவலாக _______________முதல்_______________வரை உள்ளது.

A) 18–40 நானோமீட்டர்

**B) 18–400 நானோமீட்டர்**

C) 8–40 நானோமீட்டர்

D) 18–400 நானோமீட்டர்

**விளக்கம்: வைரஸ் மிகச்சிறியவையாகும். இதனுடைய உருவ அளவு பரவலாக 18 முதல் 400 நானோமீட்டர் வரை உள்ளது.**

23) எச்.ஐ.வி என்பதன் பொருள் என்ன?

**A) மனித நோய் எதிர்ப்பு குறைபடுத்தும் வைரஸ்**

B) மனித நோய் குறைப்பு வைரஸ்

C) பாலியல் தொடர்பு வைரஸ்

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: எச்.ஐ.வி என்றால் மனித நோய் எதிர்ப்பு குறைபடுத்தும் வைரஸ் என்கிறோம். இந்த வைரஸ் இரத்த வெள்ளையணுக்களை அல்லது லிம்போசைட்டுகளைத் தாக்கி உடலினை பலவீனமடையச் செய்கிறது. மேலும் உடலில் தானாகவே நோயினை எதிர்க்கும் திறனைக் குறைக்கிறது.**

24) பூஞ்சை கீழ்க்கண்ட எந்த முறையில் இனப்பெருக்கம் செய்வதில்லை?

A) உடல்வழி இனப்பெருக்கம்

B) பாலிலா இனப்பெருக்கம்

C) பால் இனப்பெருக்கம்

**D) அரும்புதல்**

**விளக்கம்: பூஞ்சையின் இனப்பெருக்க முறைகள்:**

**1. உடல்வழி (வெஜிடேட்டிவ்) – இரண்டாகப் பிளத்தல், மொட்டு விடுதல், துண்டாதல்**

**2. பாலிலா இனப்பெருக்கம் – கொனிடிய வித்துக்கள் உருவாதல்**

**3. பால் இனப்பெருக்கம் – ஆந்த்ரிடியம் ஊகோனியம் என்று அழைக்கப்படும் ஆண் மற்றும் பெண் கேமிட்டான்ஜியம்.**

25)பீரியான்கள் என்ற பதம் எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?

A) 1929

B) 1967

**C) 1982**

D) 1875

**விளக்கம்: பிரீயான்கள் என்ற பதம் ஸ்டான்லி பி.பிரூய்ஸ்னர் என்பவரால் 1982–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.**

26) பிரீயான்கள் என்பது கீழ்க்கண்ட எதனைக் குறிக்கும்?

A) **புரதங்களை மட்டுமே கொண்ட வைரஸ்**

B) புரதங்களை மட்டுமே கொண்ட பாக்டீரியா

C) புரதங்களை மட்டுமே கொண்ட பூஞ்சைகள்

D) புரதங்களை மட்டுமே கொண்ட புரோட்டோசோவா

**விளக்கம்: பிரீயான்கள் என்பது புரதங்களை மட்டுமே கொண்ட வைரஸ் துகள்களாகும். பிரீயான்கள் என்ற பதம் ஸ்டான்லி பி.பிரூய்ஸ்னர் என்பவரால் 1982–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.**

27) வைரஸ் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. இவை புரதத்தால் சூழப்பட்டுள்ளன.

2. வைரஸில் காணப்படும் நியூக்ளிக் அமிலங்கள் டி.என்.ஏ–வாக மட்டுமே இருக்கும்

**A) 1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. இவை புரதத்தால் சூழப்பட்டுள்ளன.**

**2. வைரஸில் காணப்படும் நியூக்ளிக் அமிலங்கள் டி.என்.ஏ–வாக அல்லது ஆர்.என்.ஏ–வாகவோ காணப்படுகின்றன.**

28) பீரியான்கள் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. இவற்றில் நியூக்ளிக் அமிலமானது காணப்படவில்லை.

2. இவை நோயினைத் தோற்றுவிக்கக்கூடிய, ஆனால் வைரஸ்களைவிட பெரிய அமைப்புடையவை ஆகும்.

3. இவை கோல் வடிவத்தில் இருக்கின்றன.

4. பிரீயான்கள் என்ற பதம் 1982–ல் ஸ்டான்லி பி.ப்ரூய்ஸ்னர் என்பவரால் உருவாக்கப்பட்டது.

A) 1, 3 சரி

**B) 1, 3, 4 சரி**

C) 1, 2, 4 சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. இவற்றில் நியூக்ளிக் அமிலமானது காணப்படவில்லை**

**2. இவை நோயினைத் தோற்றுவிக்கக்கூடிய, ஆனால் வைரஸ்களைவிட சிறிய அமைப்புடையவை ஆகும்.**

**3. இவை கோல் வடிவத்தில் இருக்கின்றன.**

**4. பிரீயான்கள் என்ற பதம் 1982–ல் ஸ்டான்லி பி.ப்ரூய்ஸ்னர் என்பவரால் உருவாக்கப்பட்டது.**

29) தவறான ஒன்றை தெரிவு செய்க.

A) முதல் எச்.ஐ.வி பாதிப்பு – ஹட்டாய்

B) இந்தியாவின் முதல் எச்.ஐ.வி பாதிப்பு – தமிழ்நாடு

**C) முதல் எச்.ஐ.வி தடுப்பூசி – அமெரிக்கா**

D) முதல் எச்.வி.ஐ தடுப்பூசி ஆய்வறிக்கை – 2011

**விளக்கம்: முதல் எச்.ஐ.வி பாதிப்பு – ஹட்டாய் (அமெரிக்கா) – 1981**

**இந்தியாவின் முதல் எச்.ஐ.வி பாதிப்பு – தமிழ்நாடு(1986)**

**முதல் எச்.ஐ.வி தடுப்பூசி – தாய்லாந்து (2003 சோதனைக்காக)**

**முதல் எச்.வி.ஐ தடுப்பூசி ஆய்வறிக்கை – 2011**

30) கீழ்க்கண்டவற்றில் எது உயிரியல் துப்புரவாளர் அல்ல?

A) கார்பன்

B) நைட்ரஜன்

C) ஆக்ஸிஜன்

**D) ஹைட்ரஜன்**

**விளக்கம்: நுண்ணுயிரிகள் உயிரியக் கட்டுப்பாட்டுக் காரணியாகவும், உயிரின உரங்களாகவும் விவசாயத்துறையில் முக்கியப் பங்களிக்கின்றன. இவை, கார்பன், நைட்ரஜன், ஆக்ஸிஜன், சல்பர் மற்றும் பாஸ்பரஸ் போன்ற தனிமங்களின் சுழற்சியில் முக்கியப் பங்காற்றுகின்றன. இவை உயிரியல் துப்புரவாளர்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.**

31) கீழ்க்கண்டவற்றில் எது உயிரி உரங்களின் முக்கிய ஆதாரம் அல்ல?

A) பாக்டீரியா

B) சயனோ பாக்டீரியா

C) பூஞ்சை

**D) ஆல்கா**

**விளக்கம்: நிலத்திலுள்ள மண்ணினை சத்துமிக்கதாய் வளப்படுத்தும் நுண்ணுயிரிகள் உயிரி உரங்கள் என அழைக்கப்படுகின்றன. பாக்டீரியா, சயனோ பாக்டீரியா மற்றும் பூஞ்சை ஆகியவை உயிரி உரங்களின் முக்கிய ஆதாரங்கள் ஆகும்.**

32) திருகு வடிவத்தில் காணப்படும் பாக்டீரியங்கள்___________________என அழைக்கப்படுகின்றன

A) காக்கைகள்

B) பேசில்லைகள்

**C) ஸ்பைரில்லா**

D) ஸ்பைரில்லம்

**விளக்கம்: வடிவங்களை அடிப்படையாக் கொண்டு பாக்டீரியங்கள் மூன்று வகைப்படும். அவற்றில் திருகு வடிவத்தில் காணப்படும் பாக்டீரியங்கள் ஸ்பைரில்லா என அழைக்கப்படுகின்றன.**

33) கூற்றுகளை ஆராய்க.

1. சில பாக்டீரியங்களில் செல் சுவரினைச் சுற்றி பல கூட்டுச் சக்கரைகளால் (பாலிசாக்கரைடு) உருவான கூடுதலான மெல்லிய படலம் போன்ற அமைப்பு பாதுகாப்பிற்காகக் காணப்படுகிறது.

2. பாக்டீரியாவின் பிளாஸ்மா படலம் ரைபோசோம்கள் மற்றும் மரபணுப்பொருளாகிய டி.என்.ஏ வையும் உள்ளடக்கியுள்ளது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. சில பாக்டீரியங்களில் செல் சுவரினைச் சுற்றி பல கூட்டுச் சக்கரைகளால்(பாலிசாக்கரைடு) உருவான கூடுதலான மெல்லிய படலம் போன்ற அமைப்பு பாதுகாப்பிற்காகக் காணப்படுகிறது.**

**2. பாக்டீரியாவின் பிளாஸ்மா படலம் ரைபோசோம்கள் மற்றும் மரபணுப்பொருளாகிய டி.என்.ஏ வையும் உள்ளடக்கியுள்ளது.**

34) தாவர ஊட்டச்சத்துகளில் மிகவும் முக்கியமானவை நைட்ரஜன். வளிமண்டலத்தில் வாயுவாக காணப்படும் இவற்றை நிலைநிறுத்துவதில் முக்கிய பங்காற்றுவது எது?

A) அசோடோபாக்டர் நைட்ரோசோமோனாஸ்

B) நாஸ்டாக்

C) ரைசோபியம்

**D) மேற்கண்ட அனைத்தும்**

**விளக்கம்: தாவர ஊட்டச்சத்துகளில் மிகவும் முக்கியமானவை நைட்ரஜன். வளிமண்டலத்தில் வாயுவாக காணப்படும் இவற்றை நிலைநிறுத்துவதில் முக்கிய பங்காற்றுவது:**

**1. அசோடோபாக்டர் நைட்ரோசோமோனாஸ்**

**2. நாஸ்டாக்**

**3. ரைசோபியம்**

**4. ஃப்ரான்கியா**

35) உலக சுகாதார தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

A) ஏப்ரல் 25

**B) ஏப்ரல் 7**

C) மார்ச் 22

D)டிசம்பர் 23

**விளக்கம்: ஏப்ரல் 7 – உலக சுகாதார தினம்**

**ஏப்ரல் 25 – உலக மலேரியா தினம்**

**மார்ச் 22 – உலக தண்ணீர் தினம்**

**டிசம்பர் 23 – தேசிய விவசாயிகள் தினம்**

36) கூற்றுகளை ஆராய்க.

1. ஹைஃபாக்கள் செல்சுவரால் குறுக்கிடப்பட்டோ அல்லது குறுக்கிடபடாமலோ உள்ளன.

2. ஹைஃபாக்களின் செல்சுவரானது செல்லுலோஸ் அல்லது கைட்டின் பொருளால் ஆனது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) **இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. ஹைஃபாக்கள் செல்சுவரால் குறுக்கிடப்பட்டோ அல்லது குறுக்கிடபடாமலோ உள்ளன.**

**2. ஹைஃபாக்களின் செல்சுவரானது செல்லுலோஸ் அல்லது கைட்டின் பொருளால் ஆனது.**

37) கூற்று: நுண்ணுயிரிகள் உயிரியக்கட்டுப்பாட்டுக் காரணிகள் (உயிரிபூச்சிக்கொல்லிகள்) என அழைக்கப்படுகின்றன.

காரணம்: தாவரங்களுக்கு தீங்கு விளைவிக்கும் அல்லது நோயினை உருவாக்கும் உயிரிகள் மற்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் நுண்ணுயிரிகள் பயனுள்ளதாக இருக்கின்றன.

**A) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம்**

B) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

C) கூற்று சரி, காரணம் தவறு

D) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**விளக்கம்: தாவரங்களுக்கு தீங்கு விளைவிக்கும் அல்லது நோயினை உருவாக்கும் உயிரிகள் மற்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் நுண்ணுயிரிகள் பயனுள்ளதாக இருக்கின்றன. எனவே, நுண்ணுயிரிகள் உயிரியக்கட்டுப்பாட்டுக் காரணிகள் (உயிரிபூச்சிக்கொல்லிகள்) என அழைக்கப்படுகின்றன.**

38) பேசிலஸ் துரின்சியென்சிஸ் என்பது ஒரு ______________?

A) **பாக்டீரியா**

B) பூஞ்சை

C) வைரஸ்

D) புரோட்டோசோவா

**விளக்கம்: பேசிலஸ் துரின்சியென்சிஸ் என்ற பாக்டீரியத்தின் சிற்றினத்திலிருந்து 'க்ரை' புரதம் என்று அழைக்கப்படும் புரதமானது பூச்சிகளின் இளம் உயிரிகளுக்கு நச்சுத்தன்மையுடையதாக இருந்து அவற்றைக் கொல்கின்றன.**

39) பூஞ்சைகள் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. பச்சையமற்ற உயிரினம்

2. பூஞ்சையின் உடலம் தாலஸ் என்று அழைக்கப்படுகிறது.

3. ஒரு செல் உயிரியான ஈஸ்ட் கோள வடிவத்தில் உள்ளன.

4. பல செல் உயிரிகளில் பூஞ்சையின் உடலம் மைசீலியம் என்று அழைக்கப்படுகிறது

A) 1, 2 சரி

B) 1, 2, 3 சரி

C) 2, 3, 4 சரி

**D) அனைத்தும் சரி**

**விளக்கம்: 1. பச்சையமற்ற உயிரினம்**

**2. பூஞ்சையின் உடலம் தாலஸ் என்று அழைக்கப்படுகிறது.**

**3. ஒரு செல் உயிரியான ஈஸ்ட் கோள வடிவத்தில் உள்ளன.**

**4. பல செல் உயிரிகளில் பூஞ்சையின் உடலம் மைசீலியம் என்று அழைக்கப்படுகிறது.**

40) வைரஸ் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. இதில் உள்ள டி.என்.ஏ அல்லது ஆர்.என்.ஏ, 60–95 சதவீதம் புரதங்களும் மீதி நியூக்ளிக் அமிலங்களும் காணப்படுகின்றன.

2. வைரஸ்களை படிகப்படுத்த முடியும்.

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

விளக்கம்: 1. இதில் உள்ள டி.என்.ஏ அல்லது ஆர்.என்.ஏ, 60–95 சதவீதம் புரதங்களும் மீதி நியூக்ளிக் அமிலங்களும் காணப்படுகின்றன.

2. வைரஸ்களை படிகப்படுத்த முடியும்.

41) தட்டம்மை–க்கு எவ்வகையான தடுப்பான் வழங்கப்படுகிறது?

**A) MMR**

B) BCG

C) IPV

D) ஹெப்படைட்டிஸ் B

**விளக்கம்: தட்டம்மை, பொன்னுக்கு வீங்கி, ரூபெல்லா போன்றவற்றிற்கு நோய்தடுப்பானாக MMR பயன்படுகிறது.**

42) திராட்சை பழத்தை நொதிக்க வைக்க கீழக்கண்ட எது பயன்படுகிறது?

**A) சாக்கரோமைசிஸ் செரிவிசே**

B) ஃபேசில்லஸ் மெகாடெரியம்

C) லாக்டோஃபேசில்லஸ்

D) ஆஸ்பர்ஜிலஸ்

**விளக்கம்: திராட்சைப் பழத்தை சாக்கரோமைசிஸ் செரிவிசே கொண்டு நொதிக்க வைத்து திராட்சை ரசங்கள் (வைன்) தயாரிக்கப்படுகின்றன.**

43) அஸ்பர்ஜிலஸ் நைகர் என்பது ஒரு________________ஆகும்

A) பாக்டீரியா

B) வைரஸ்

**C) பூஞ்சை**

D) புரோட்டோசோவா

**விளக்கம்:ஆஸ்பர்ஜிலஸ் நைகர் என்பது ஒரு பூஞ்சை ஆகும். இது ஆக்ஸாலிக் அமிலம், அசிடிக் அமிலம் மற்றும் சிட்ரிக் அமிலம் போன்றவை தயாரிக்கப்பயன்படுகின்றன.**

44) கீழ்க்கண்டவற்றில் எது நுண்ணுயிரிகளிடமிருந்து பெறப்படும் நொதி அல்ல?

A) லிப்பேஸ்

B) இன்வெர்டேஸ்

C) புரேட்டியேஸ்

**D) மால்டோஸ்**

**விளக்கம்: கீழ்க்கண்ட நொதிகள் நுண்ணுயிரிகளிடமிருந்து பெறப்படுகின்றன.**

**1. லிப்பபேஸ்**

**2. இன்வெர்டேஸ்**

**3. புரோட்டியேஸ்**

**4. குளுக்கோஸ் ஆக்ஸிடேஸ்**

45) தொண்டை அடைப்பான் என்னும் நோய்க்கு கீழ்க்கண்ட எந்த தடுப்பான் வழங்கப்படுகிறது?

A) டெட்டனஸ் டாக்சாய்டு

**B) டிப்தீரியா டாக்சாய்டு**

C) ஹெப்படைட்டிஸ் B தடுப்பான்

D) பேசிலஸ் கால்மெட் குய்ரின்

விளக்கம்: தொண்டை அடைப்பான்(டிப்தீரியா) என்ற நோய்க்கு டிப்தீரியா டாக்சாய்டு என்ற நோய்தடுப்பான் பயன்படுத்தப்படுகிறது.

46) திருகு வடிவத்தில் காணப்படும் ஒரு செல் பாக்டீரியங்கள்____________________என அழைக்கப்படுகின்றன

A) காக்கைகள்

B) பேசில்லைகள்

C) ஸ்பைரில்லா

**D) ஸ்பைரில்லம்**

விளக்கம்: வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு பாக்டீரியங்கள் மூன்று வகைப்படும். அவற்றில் திருகு வடிவத்தில் காணப்படும் ஒரு செல் பாக்டீரியங்கள் ஸ்பைரில்லம் என அழைக்கப்படுகின்றன.

47) வீரியான் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. ஒரு எளிய வைரஸ் துகள் வீரியான் என்று பெரும்பாலும் அழைக்கப்படுகிறது.

2. இவை உயிரற்ற செல்களில் மட்டுமே வளர்ந்து பெருகுகின்றன.

3. நோய்த் தொற்றை உருவாக்கும் காரணிகளில் இவையே மிகப் பெரியவையாகும்.

4. இதனுடைய உருவ அளவு பரவலாக 18–400 நானோ மீட்டர் வரை உள்ளது.

**A) 1, 4 சரி**

B) 1, 2, 4 சரி

C) 2, 3 சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. ஒரு எளிய வைரஸ் துகள் வீரியான் என்று பெரும்பாலும் அழைக்கப்படுகிறது.**

**2. இவை உயிருள்ள செல்களில் மட்டுமே வளர்ந்து பெருகுகின்றன.**

**3. நோய்த் தொற்றை உருவாக்கும் காரணிகளில் இவையே மிகப் சிறியனவாகும்.**

**4. இதனுடைய உருவ அளவு பரவலாக 18–400 நானோ மீட்டர் வரை உள்ளது.**

48) கீழ்க்கண்டவற்றில் எது நைட்ரஜனை நிலைநிறுத்தும் கூட்டுயிர் வாழ்க்கை முறையுடைய நுண்ணுயிரி?

A) ரைசோபியம்

B) ஃப்ரான்கியா

C) நைட்ரோசோமோனாஸ்

**D) A மற்றும் B**

**விளக்கம்: தாவர ஊட்டச்சத்துக்களில் நைட்ரஜனும் மிக முக்கியமான ஒரு ஆதாரம் ஆகும். வளிமண்டலத்தில் வாயுவாகக் காணப்படும் நைட்ரஜனானது பயன்படுத்தக்கூடிய விதத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும். இந்த மாற்றத்தினை நிகழ்த்துவதில் தனித் நிலையில் வாழும் நுண்ணுயிரிகளோ அல்லது தாவரத்தோடு கூட்டுயிர் தொடர்பினைக் கொண்டிருக்கும் நுண்ணுயிரிகளோ பெரும் பங்காற்றுகின்றன.**

**தனித்து வாழ்பவைகள்:**

**1. அசோடோபாக்டர் நைட்ரோசோமேனாஸ்**

**2. நாஸ்டாக்**

**கூட்டுயிர் வாழ்க்கை முறையுடையவை:**

**1. ரைசோபியம்**

**2. ஃபஃரான்கியா**

49) வைரஸ்களின் உயிருள்ள பண்புகளில் பெருந்தாதது எது?

A) வைரஸ்கள் பெருக்கமடையும் தன்மையிலான மரபணுப் பொருள்களையுடைய (டி.என்.ஏ அல்லது ஆர்.என்.ஏ) நியூக்ளிக் அமிலத்தைக் கொண்டுள்ளன

B) இவை ஓம்புரியிகளில் உள்ள உயிருள்ள செல்களில் பெருக்கமடைகின்றன.

C) இந்த வைரஸ்கள் ஒரு குறிப்பிட்ட ஓம்புயிரிகளையே தாக்கக்கூடியவை

**D) இவ்வகையான வைரஸ்களை படிகமாக்க முடியும்.**

**விளக்கம்: வைரஸ்களின் உயிருள்ள பண்புகள்:**

**1. வைரஸ்கள் பெருக்கமடையும் தன்மையிலான மரபணுப் பொருள்களையுடைய (டி.என்.ஏ அல்லது ஆர்.என்.ஏ) நியூக்ளிக் அமிலத்தைக் கொண்டுள்ளன**

**2. இவை ஓம்புரியிகளில் உள்ள உயிருள்ள செல்களில் பெருக்கமடைகின்றன.**

**3. இந்த வைரஸ்கள் ஒரு குறிப்பிட்ட ஓம்புயிரிகளையே தாக்கக்கூடியவை**

**உயிரற்ற பண்புகளை பெற்றிருக்கும் போது மட்டுமே வைரஸ்களை படிகமாக்க முடியும்.**

50) கூற்று: கார்பன், நைட்ரஜன், ஆக்ஸிஜன், சல்பர் மற்றும் பாஸ்பரஸ் போன்றவை உயிரியல் துப்புரவாளர் என்று அழைக்கப்படுகின்றன.

காரணம்: மேற்கண்ட தனிமங்கள் நுண்ணுயிரிகளை அழிக்கப்பயன்படுகின்றன

**A) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம்**

B) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

C) கூற்று சரி, காரணம் தவறு

D) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**விளக்கம்: நுண்ணுயிரிகள் உயிரியக் கட்டுப்பாட்டுக் காரணியாகவும், உயிரின உரங்களாகவும் விவசாயத்துறையில் முக்கியப் பங்களிக்கின்றன. இவை, கார்பன், நைட்ரஜன், ஆக்ஸிஜன், சல்பர் மற்றும்**

**பாஸ்பரஸ் போன்ற தனிமங்களின் சுழற்சியில் முக்கியப் பங்காற்றுகின்றன. இவை உயிரியல் துப்புரவாளர்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.**

51) பெனிசிலின் என்ற நுண்ணுயிர் எதிர்பொருளை யார் கண்டறிந்தார்?

A) இராபர்ட் கோச்

**B) அலெக்ஸாண்டர் ஃபிளெம்மிங்**

C) இராபர்ட் பர்கின்ஜி

D) லூயிஸ் பாய்ஸ்டர்

**விளக்கம்: நுண்ணுயிரிகளின் வளர்சிதை மாற்றத்தின் விளைபொருள்களே நுண்ணுயிரி எதிர்பொருள்கள் (ஆண்டிபயோடிக்) ஆகும். இவை நோயினைப் பரப்பும் நுண்ணுயிரிகளைத் தாக்கி அவற்றிற்கு தீங்கிழைக்கும் அல்லது அவற்றைக் கட்டுப்படுத்தும் தன்மையுடையவை. அலெக்ஸாண்டர் ஃபிளம்மிங் என்பார் பெனசிலின் என்ற நுண்ணுயிர் எதிர்பொருளினை முதன்முதலில் தயாரித்தார்.**

52) கூற்றுகளை ஆராய்க.

1. ஒரு செல் உயிரியான ஈஸ்ட் ஒரு பாக்டீரியா வகை ஆகும்.

2. வைரஸ் என்ற கிரேக்க மொழிச் சொல்லின் பொருள் நச்சு அல்லது விஷத்தன்மையுள்ள திரவம் என்று பொருள்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

**D) இரண்டும் தவறு**

**விளக்கம்: 1. ஒரு செல் உயிரியான ஈஸ்ட் ஒரு பூஞ்சை வகை ஆகும்.**

**2. வைரஸ் என்ற இலத்தீன் மொழிச் சொல்லின் பொருள் நச்சு அல்லது விஷத்தன்மையுள்ள திரவம் என்று பொருள்.**

53) உலக எய்ட்ஸ் தினம் எப்போது கடைபிடிக்கப்படுகிறது?

A) ஏப்ரல் 7

B) ஏப்ரல் 25

**C) டிசம்பர் 1**

D) மார்ச் 24

**விளக்கம்: டிசம்பர் 1 – உலக எய்ட்ஸ் தினம்**

**ஏப்ரல் 7 – உலக சுகாதார தினம்**

**ஏப்ரல் 25 – உலக மலேரியா தினம்**

**மார்ச் 24 – உலக காசநோய் எதிர்ப்பு தினம்**

54) எச்.வி.ஐ பற்றிய கூற்றுகளில் தவறானது எது?

A) 1981 – முதல் எச்.ஐ.வி பாதிப்பு கண்டறியப்பட்டது

**B) 1987 – இந்தியாவில் முதல் எச்.வி.ஐ பாதிப்பு கண்டறியப்பட்டது**

C) 2003 – எச்.ஐ.வி தடுப்பூசி மருந்து சோதனைக்காக வழங்கப்பட்டது

D) 2011 – தடுப்பூசி மருந்தின் ஆய்வறிக்கை வழங்கப்பட்டது

**விளக்கம்: 1981 – முதல் எச்.ஐ.வி பாதிப்பு அமெரிக்காவின் ஹட்டாய் என்ற இடத்தில் கண்டறியப்பட்டது.**

**1986 – இந்தியாவில் முதல் எச்.வி.ஐ பாதிப்பு கண்டறியப்பட்டது**

**2003 – எச்.ஐ.வி தடுப்பூசி மருந்து தாய்லாந்து நாட்டில் சோதனைக்காக வழங்கப்பட்டது**

**2011 – தடுப்பூசி மருந்தின் ஆய்வறிக்கை வழங்கப்பட்டது.**

55) கீழ்க்கண்டவற்றில் எது காசநோய்க்கு நோய் தடுப்பானாக பயன்படுகிறது?

A) MMR

**B) BCG**

C) IPV

D) ஹெப்படைட்டிஸ் B

**விளக்கம்: காசநோய்க்கு BCG (பேசிலஸ் கால்மெட் குய்ரின்) என்பது தடுப்பானாக பயன்படுகிறது. இது உயிருள்ள நோய் உண்டாக்கும் வீரியம் குறைக்கப்பட்ட தடுப்பானின் வகை ஆகும்.**

56) Disease என்ற ஆங்கில சொல்லின் பொருள்?

A) வசதிக்கு எதிரானது

B) வசதிக்கு உகந்தது

C) தொல்லை தரக்கூடியது

D) உடலைக் கெடுக்கக்கூடியது

**விளக்கம்: நோய் என அழைக்கப்படும் பதமானது ஆங்கிலத்தில் 'disease' எனப்படுகிறது. இதில் dis என்பது 'எதிரானது' (against) என்ற பொருளையும் ease என்பது 'வசதியாக'(comfort) என்ற பொருளையும் பெற்று 'வசதிக்கு எதிரானது'(disease) எனப்படுகிறது.**

57) நோய் காணப்படுவதின் அடிப்படையில் எத்தனை வகைப்படும்?

A) 2

B) 3

**C) 4**

D) 5

**விளக்கம்: நோய் காணப்படுவதின் அடிப்படையில் நான்கு வகைப்படும். அவை,**

**1. வட்டார நோய்**

**2. கொள்ளை நோய்**

**3. பெருங்கொள்ளை நோய்**

**4. தொடர்ச்சியற்ற நோய்**

58) பொருத்துக.

| | |
|---|---|
| அ. வட்டார நோய் | – 1. பான்டெமிக் |
| ஆ. கொள்ளை நோய் | – 2. எபிடெமிக் |
| இ. பெருங்கொள்ளை நோய் | – 3. என்டெமிக் |
| ஈ. தொடர்ச்சியற்ற நோய் | – 4. ஸ்பொராடிக் |

A) 2, 3, 1, 4

B) 2, 3, 4, 1

C) 3, 2, 4, 1

**D) 3, 2, 1, 4**

**விளக்கம்: நோய் காணப்படுவதின் அடிப்படையில் நான்கு வகைப்படும். அவை**

**1. வட்டார நோய் – ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறைவான மக்களை மட்டும் தாக்கும்**

**2. கொள்ளை நோய் – ஒரு குறிப்பிட்ட பகுதியில் தோன்றி அதிக எண்ணிக்கையில் மக்களை பாதிக்கும்**

**3. பெருங்கொள்ளை நோய் – உலகம் முழுவதும் பரவி அதிகளவு சேதத்தை ஏற்படுத்தும்**

**4. தொடர்ச்சியற்ற நோய் – எப்போதாவது தோன்றுகிற ஒரு நோய்.**

59) கா∴பி மற்றும் தேயிலைச் செடி இலைகள் எந்த நுண்ணுயிரியைப் பயன்படுத்தி நொதிக்க வைக்கப்படுகின்றன?

A) சாக்கரோமைசிஸ் செரிவிசே

**B) ∴பேசில்லஸ் மெகாடெரியம்**

C) லாக்டோ∴பேசில்லஸ்

D) ஆஸ்பர்ஜிலஸ்

**விளக்கம்: கா∴பி மற்றும் தேயிலைச் செடி போன்றவை ∴பேசில்லஸ் மெகாடெரியம் என்ற பாக்டீரியாவைப் பயன்படுத்தி நொதிக்க வைக்கப்படுகின்றன. இது சிறப்பான நறுமணத்தைத் தருகிறது.**

60) கூற்றுகளை ஆராய்க.

1. பாக்டீரியா ஒரு புரோகேரியாட்டிக் உயிரினங்களாகும்.

2. ஒரு எளிய வைரஸ் வீரியான் என்று அழைக்கப்படுகிறது

3. 1664 ஆம் ஆண்டில் தனது பல்லிலிருந்து சிதைவுற்ற பகுதியை எடுத்து அதை நுண்ணோக்கியின் உதவியுடன் உற்று நோக்கினார் ஆன்டன் வான் லூவன்ஹக்.

4. அடினோ வைரஸ் என்பது ஒரு வகையான தாவர வைரஸ் ஆகும்

**A) 1, 2 சரி**

B) 1, 2, 4 சரி

C) 1, 2, 3 சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. பாக்டீரியா ஒரு புரோகேரியாட்டிக் உயிரினங்களாகும்.**

**2. ஒரு எளிய வைரஸ் வீரியான் என்று அழைக்கப்படுகிறது**

**3. 1647 ஆம் ஆண்டில் தனது பல்லிலிருந்து சிதைவுற்ற பகுதியை எடுத்து அதை நுண்ணோக்கியின் உதவியுடன் உற்று நோக்கினார் ஆன்டன் வான் லூவன்ஹக்.**

**4. அடினோ வைரஸ் என்பது ஒரு வகையான விலங்கு வைரஸ் ஆகும்**

61) பரவும் நிலைகளைக் கொண்டு நோய்கள் எத்தனை வகைப்படும்?

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: பரவும் நிலை கொண்டு நோய்கள் இரண்டு வகைப்படும். அவை,**

**1. தொற்றும் தன்மையுடைய நோய்கள்**

**2. தொற்றும் தன்மையற்ற நோய்கள்**

62) மனிதர்களில் நுண்ணுயிர் எதிர்பொருள்களாவை கீழ்க்கண்ட எதனைக் கட்டுப்படுத்த பயன்படுவதில்லை?

A) வாந்திபேதி (காலரா)

B) தொண்டை அடைப்பான் (டிப்தீரியா)

C) நிமோனியா

**D) மலேரியா**

**விளக்கம்: மனிதர்களில் நுண்ணுயிர் எதிர்பொருள்களானவை வாந்திபேதி (காலரா), தொண்டை அடைப்பான் (டிப்தீரியா), நிமோனியா, டைபாய்டு போன்ற நோய்களைக் கட்டப்படுத்த பயன்படுகின்றன.**

63) அலெக்ஸாண்டர் ஃபிளம்மிங் என்பார் பெனசிலின் என்ற நுண்ணுயிர் எதிர்பொருளினை முதன்முதலில் எந்த ஆண்டு தயாரித்தார்?

A) 1913

B) 1919

C) 1928

**D) 1929**

**விளக்கம்: அலெக்ஸாண்டர் ஃபிளம்மிங் என்பார் பெனிசிலின் என்ற நுண்ணுயிர் எதிர்பொருளினை முதன்முதலில் 1929–ஆம் ஆண்டு தயாரித்தார்.**

64) வைரஸ்களின் உயிரற்ற பண்புகளில் பொருந்தாதது எது?

A) வைரஸ்கள் ஓம்புயிரிகளுக்கு வெளியே மந்தமான பொருள்களாகவே இருக்கின்றன.

B) வைரஸ்கள் செல்சவ்வு மற்றும் செல்சுவர் அற்றவை. அதைப்போலவே செல் நுண்ணுறுப்புகளாகிய ரைபோசோம்கள், மைட்டோகாண்ட்ரியா முதலியவைகளும் வைரஸில் காணப்படுவதில்லை

**C) வைரஸ்கள் பெருக்கமடையும் தன்மையிலான மரபணுப் பொருள்களையுடைய (டி.என்.ஏ அல்லது ஆர்.என்.ஏ) நியூக்ளிக் அமிலத்தைக் கொண்டுள்ளன.**

D) இவ்வகையான வைரஸ்களை படிகமாக்க முடியும்

**விளக்கம்: வைரஸ்களின் உயிரற்ற பண்புகள்:**

**1. வைரஸ்கள் ஓம்புயிரிகளுக்கு வெளியே மந்தமான பொருள்களாகவே இருக்கின்றன.**

**2. வைரஸ்கள் செல்சவ்வு மற்றும் செல்சுவர் அற்றவை. அதைப்போலவே செல் நுண்ணுறுப்புகளாகிய ரைபோசோம்கள், மைட்டோகாண்ட்ரியா முதலியவைகளும் வைரஸில் காணப்படுவதில்லை.**

**3. இவ்வகையான வைரஸ்களை படிகமாக்க முடியும்.**

**உயிருள்ள பண்புகளைக் கொண்ட வைரஸ்கள் பெருக்கமடையும் தன்மையிலான மரபணுப் பொருள்களையுடைய (டி.என்.ஏ அல்லது ஆர்.என்.ஏ) நியூக்ளிக் அமிலத்தைக் கொண்டுள்ளன.**

65) ஆஸ்பர்ஜிலஸ் என்ற பூஞ்சை மூலம் கீழ்க்கண்ட எந்த அமிலம் தயாரிக்கப்படுவதில்லை?

A) ஆக்ஸாலிக் அமிலம்

B) அசிடிக் அமிலம்

C) சிட்ரிக் அமிலம்

**D) மாலிக் அமிலம்**

**விளக்கம்: ஆஸ்பர்ஜிலஸ் நைகர் என்ற பூஞ்சை மூலம் கீழ்க்கண்ட அமிலங்கள் தயாரிக்கப்படுகின்றன.**

**1. ஆக்ஸாலிக் அமிலம்**

**2. அசிடிக் அமிலம்**

**3. சிட்ரிக் அமிலம்**

66) ஈஸ்ட்கள் எந்த வைட்டமின் கூட்டுப்பொருள்களை அதிகம் உற்பத்தி செய்யும் ஆதாரங்களாக உள்ளன?

A) வைட்டமின் A

B) வைட்டமின் B

C) வைட்டமின்C

D) வைட்டமின் D

**விளக்கம்: ஈஸ்ட்கள் வைட்டமின் B கூட்டுப்பொருள்களை (காம்ப்ளக்ஸ்) அதிகம் உற்பத்தி செய்யும் ஆதாரங்களாக உள்ளன.**

67) காய்டர் என்னும் நோய் கீழக்கண்ட எந்த வகை நோயாகும்?

**A) வட்டார நோய்**

B) கொள்ளை நோய்

C) பெருங்கொள்ளை நோய்

D) தொடர்ச்சியற்ற நோய்

**விளக்கம்: காய்டர் என்றால் முன்கழுத்துக் கழலை நோய் ஆகும். இது இமயமலைப் பிரதேசத்தின் அடிவாரப் பகுதியிலுள்ளவர்களுக்கு வரும் ஒரு நோயாகும். அதாவது ஒரு புவிப்பரப்பில் குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே, குறைவான மக்களை தாக்குகின்றன நோய். எனவே இது வட்டார நோய் (என்டெமிக்) எனப்படும்.**

68) உலகம் முழுவதும் அதிக அளவில் பரவி பெரும் சேதத்தை ஏற்படுத்தும் நோய் பெருங்கொள்ளை நோய் ஆகும். கீழ்க்கண்டவற்றுள் இதற்குப் பொருத்தமான நோய் எது?

A) மலேரியா

B) காலரா

**C) எய்ட்ஸ்**

D) இன்புளுயென்சா

**விளக்கம்: எய்ட்ஸ் – பெருங்கொள்ளை நோய்**

**மலேரியா மற்றும் காலரா – தொடர்ச்சியற்ற நோய்**

**இன்புளுயென்சா – கொள்ளை நோய்**

69) பாக்டீரியாவின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

A) இராபர்ட் ஹுக்

B) இராபர்ட் கோச்

**C) இராபர்ட் கோ.ஃ**

D) இராபர்ட் பர்கின்ஜி

**விளக்கம்: பாக்டீரியாவியலின் தந்தை என்று அழைக்கப்படுபவர் இராபர்ட் கோ.ஃ. இவர் ஜெர்மானிய மருத்துவராவார்.**

70) கீழ்க்கண்டவற்றில் எது பூஞ்சையால் உருவாக்கப்படும் எதிர்ப்பொருள்?

A) பெனிசிலின்

B) செபலோஸ்போரின்

C) ஸ்டெரெப்டோமைசின்

D) A மற்றும் B

**விளக்கம்: பூஞ்சையால் உருவாக்கப்படும் எதிர்பொருள்:**

**1. பெனிசிலின்**

**2. செபலோஸ்போரின்**

**பாக்டீரியாவால் உருவாக்கப்படும் எதிர்பொருள்:**

**ஸ்டெரெப்டோமைசின்**

**எரித்ரோமைசின்**

**பேசிட்ரசின்**

71) இளம்பிள்ளை வாதத்தை போக்க கீழ்க்கண்ட எந்த நோய் தடுப்பான் பயன்படுத்தப்படுகிறது?

A) MMR

B) BCG

C) IPV

D) ஹெப்படைட்டிஸ் B

**விளக்கம்: போலியோ என்று அழைக்கப்படும் இளம்பிள்ளை வாத நோயை அகற்ற செயல்படாத போலியோ வைரஸ்(IPV) என்ற நோய் தடுப்பான் பயன்படுகிறது. இது செயல்படாத தடுப்பான்(ஆன்டிஜன் நீக்கப்பட்ட) ஆகும்.**

72) கோக்கோ தாவரத்தின் விதைகள் மற்றும் புகையிலைச் செடியின் இலைகள் போன்றவை கீழக்கண்ட எந்த நுண்ணுயிரியைப் பயன்படுத்தி நொதிக்க வைக்கப்படுகின்றன?

A) சாக்கரோமைசிஸ் செரிவிசே

**B) ஃபேசில்லஸ் மெகாடெரியம்**

C) லாக்டோஃபேசில்லஸ்

D) ஆஸ்பர்ஜிலஸ்

**விளக்கம்: காஃபி மற்றும் கோக்கோ தாவரத்தின் விதைகள், தேயிலைச் செடி மற்றும் புகையிலைச் செடியின் இலைகள் ஆகியவை ஃபேசில்லஸ் மெகாடெரியம் என்ற பாக்டீரியாவைப் பயன்படுத்தி நொதிக்க வைக்கப்படுகின்றன. இது சிறப்பான நறுமணத்தைத் தருகிறது.**

73) புவிப்பரப்பில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறைவான மக்களை மட்டும் தாக்குகின்ற நோய் கீழ்க்கண்டவற்றில் எது?

**A) என்டெமிக்**

B) எபிடெமிக்

C) பான்டெமிக்

D) ஸ்பொராடிக்

**விளக்கம்: புவிப்பரப்பில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறைவான மக்களை மட்டும் தாக்குகின்ற நோய் வட்டார நோய் எனப்படும். இதனை என்டமிக் என்பர்.**

74) எப்போதாவது தோன்றுகின்ற நோய் தொடர்ச்சியற்ற நோய் எனப்படும். கீழ்க்கண்டவற்றில் எது தொடர்ச்சியற்ற நோய்?

A) காய்டர்

**B) மலேரியா**

C) எய்ட்ஸ்

D) இன்புளுயென்சா

**விளக்கம்: காய்டர் – வட்டார நோய்**

**மலேரியா – தொடர்ச்சியற்ற நோய்**

**எய்ட்ஸ் – பெருங்கொள்ளை நோய்**

**இன்புளுயென்சா – கொள்ளை நோய்**

75) எச்.ஐ.வி நோய்கான தடுப்பூசி ஆய்வறிக்கை எந்த ஆண்டு வழங்கப்பட்டது?

A) 1981

B) 1986

C) 2003

**D) 2011**

**விளக்கம்: எச்.ஐ.வி நோயானது இரத்த வெள்ளையணுக்களைத் தாக்கி உடலினை தானாகவே நோயினை எதிர்க்கும் திறனைக் குறைக்கிறது. எய்ட்ஸ் பாதிப்பிற்கு எய்ட்ஸ் தடுப்பூசி ஆர்.வி. 144 என்ற மருந்தானது தாய்லாந்து நாட்டில் 2003–ஆம் ஆண்டு சோதனைக்காக வழங்கப்பட்டது. இதனுடைய ஆய்வறிக்கை 2011–ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.**

76) கீழ்க்கண்ட எது தொற்றாத நோய் அல்ல?

A) புற்றுநோய்

B) நீரழிவுநோய்

C) முன் கழுத்துக் கழலை

**D) நிமோனியா**

**விளக்கம்: தொற்றும் தன்மையுடைய நோய்கள்:**

**1. இன்புளுயென்சா**

**2. காசநோய்**

**3. பெரியம்மை**

**4. காலரா**

**5. நிமோனியா**

**6. மலேரியா**

**தொற்றும் தன்மையற்ற நோய்:**

**1. நீரழிவு நோய்**

**2. புற்றுநோய்**

**3. இதயம் சார்ந்த நோய்கள்**

**4. உடல் பருமன்**

**5. முன் கழுத்துக் கழலை**

77) தொற்றாத நோய் பரவும் காரணங்களை ஆராய்க.

1. முறையாக இயங்காத உடல் உறுப்புகள்.

2. மரபுக் காரணங்கள்

3. ஹார்மோனின் அளவில் காணப்படும் ஏற்றத்தாழ்வு நிலை

4. நோய் எதிரப்பு அமைப்பிலுள்ள குறைபாடு

A) 1, 2 சரி

B) 1, 2, 3 சரி

C) 1, 2, 4 சரி

**D) அனைத்தும் சரி**

**விளக்கம்: தொற்றாத நோய்கள் பரவாத நோய்களாகும். இவை கீழ்க்கண்ட காரணங்களால் ஏற்படுகிறது.**

**1. முறையாக இயங்காத உடல் உறுப்புகள்.**

**2. மரபுக் காரணங்கள்**

**3. ஹார்மோனின் அளவில் காணப்படும் ஏற்றத்தாழ்வு நிலை**

**4. நோய் எதிரப்பு அமைப்பிலுள்ள குறைபாடு.**

78) நோயரும்பு காலம் என்பது எது?

**A) நோய் தொற்றும் காலத்திற்கும் நோயின் முதல் அறிகுறி வெளிப்படும் காலத்திற்கும் இடைப்பட்ட காலம்**

B) நோய் தொற்றும் காலத்திற்கும் நோய் முழுமையாக குணமாகும் காலத்திற்கும் இடைப்பட்ட காலம்

C) நோயின் முதல் அறிகுறி வெளிப்படும் காலத்திற்கும் குணமாகும் காலத்திற்கும் இடைப்பட்ட காலம்

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: நோயரும்பு காலம் அல்லது நோய் அடைகாக்கும் காலம் என்பது நோய் தொற்றும் காலத்திற்கும் நோயின் முதல் அறிகுறி வெளிப்படும் காலத்திற்கும் இடைப்பட்ட காலம் ஆகும். இது சில மணி நேரம் முதல் பல நாட்கள் வரை வேறுபட்டுக் காணப்படும்.**

79) மஞ்சள் காமாலையை ஏற்படுத்தும் வைரஸ்கள் எந்த உடல் உறுப்பை பாதிக்கின்றன?

A) நுரையீரல்

B) சிறுநீரகம்

**C) கல்லீரல்**

D) இதயம்

**விளக்கம்: மஞ்சள் காமாலையை ஏற்படுத்தும் வைரஸ்கள் கல்லீரல் திசுக்களை அழிக்கின்றன.**

80) கூற்றுகளை ஆராய்க.

1. பாக்டீரியா, சயனோ பாக்டீரியா மற்றும் பூஞ்சை ஆகியவை உயிரி உரங்களின் முக்கிய ஆதாரங்கள் ஆகும்.

2. பூஞ்சைகள் உடல்வழி இனப்பெருக்கம் செய்வதில்லை. மாறாக பால் மற்றும் பாலிலா முறையில் இனப்பெருக்கம் செய்கின்றன.

**A) 1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்:1. பாக்டீரியா, சயனோ பாக்டீரியா மற்றும் பூஞ்சை ஆகியவை உயிரி உரங்களின் முக்கிய ஆதாரங்கள் ஆகும்.**

**2. பூஞ்சைகள் உடல்வழி இனப்பெருக்கம், பால் மற்றும் பாலிலா முறையில் இனப்பெருக்கம் செய்கின்றன.**

81) எந்த நுண்ணுயிரி காற்று வழி நோய்த் தொற்றை ஏற்படுத்துகின்றன?

**A) வைரஸ் மற்றும் பாக்டீரியா**

B) வைரஸ் மற்றும் புரோட்டோசோவா

C) பாக்டீரியா மற்றும் பூஞ்சை

D) பாக்டீரியா மற்றும் புரோட்டோசோவா

**விளக்கம்: வைரஸ் மற்றும் பாக்டீரியா போன்ற நுண்ணுயிரிகள் காற்றுவழி நோய்களை உருவாக்குகின்றன.**

82) கீழ்க்கண்ட எந்த நோய் பாக்டீரியா நோய் அல்ல?

A) காசநோய்

B) தொண்டை அழற்சி

C) கக்குவான் இருமல்

**D) பொன்னுக்கு வீங்கி**

**விளக்கம்: பாக்டீரியாவில் ஏற்படும் நோய்கள்:**

**1. காசநோய்**

**2. தொண்டை அழற்சி**

**3. கக்குவான் இருமல்**

**பொன்னுக்கு வீங்கி என்பது மிக்சோ வைரஸ் பரோடிடிஸ் என்ற வைரஸால் ஏற்படுகிறது.**

83) கீழக்கண்டவற்றில் எந்த நோய் சுவாசப்பாதையை பாதிக்காது?

A) தட்டம்மை

B) சின்னம்மை

C) கக்குவான் இருமல்

**D) காசநோய்**

**விளக்கம்: காசநோய் தவிர மேற்கண்ட அனைத்து நோய்களும் சுவாக் குழாய்களை பாதிக்கும் நோய்களாகும். காசநோய் நுரையீரலைப் பாதிக்கும் நோயாகும்.**

84) நுண்கிருமிகள் எப்படி நோய்களைத் தோற்றுவிக்கின்றன என்று முதன்முதலில் கற்றவர் யார்?

A) இராபர்ட் ஹுக்

B) இராபர்ட் கோச்

**C) இராபர்ட் கோஃ**

D) இராபர்ட் பாஸ்டியர்

**விளக்கம்: பாக்டீரியாவியலின் தந்தை என்று அழைக்கப்படுபவர் இராபர்ட் கோஃ. இவர் ஜெர்மானிய மருத்துவராவார். இவர் முதன் முதலில் நுண்கிருமிகள் எப்படி நோய்களைத் தோற்றுவிக்கின்றன என்பதை கற்றவராவார்.**

85) புவியின் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரே நேரத்தில் தோன்றி அதிகமான எண்ணிக்கையில் மக்களைப் பாதிக்கும் வகையைச் சார்ந்த நோய்_____________எனப்படும்

A) என்டெமிக்

**B) எபிடெமிக்**

C) பான்டெமிக்

D) ஸ்பொராடிக்

**விளக்கம்: புவியின் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பகுதயில் ஒரே நேரத்தில் தோன்றி அதிகமான எண்ணிக்கையில் மக்களைப் பாதிக்கும் வகையைச் சார்ந்த நோய் கொள்கை நோய் எனப்படும். இதனை எபிடெமிக் என்பர்.**

86) காசநோய் எந்த பாக்டீரியாவால் ஏற்படுகிறது?

A) போர்டெடெல்லா பெர்டுசிஸ்

B) கோர்னிபாக்டீரியம் டிஃப்தீரியே

**C) மைக்கோபாக்டீரியம் டியூபர்குளோசிஸ்**

D) வாரிசெல்லா ஸோஸ்டர்

**விளக்கம்: காசநோய் மைக்கோபாக்டீரியம் டியூபர்குளோசிஸ் என்ற பாக்டீரியாவால் ஏற்படுகிறது. இது நுரையீரலைப் பாதிக்கிறது. இதன் அறிகுறிகள்:**

**1. தொடர் இருமல்**

**2. நெஞ்சு வலி**

**3. உடல் எடை குறைவு**

**4. பசியின்மை.**

87) பொன்னுக்கு வீங்கி என்ற நோய் எந்த வைரஸ்–ஆல் ஏற்படுகிறது?

**A) மிக்சோ வைரஸ் பரோடிடிஸ்**

B) வாரிசெல்லா ஸோஸ்டர்

C) ரூபெல்லா வைரஸ்

D) ரைனோ வைரஸ்

**விளக்கம்: பொன்னுக்கு வீங்கி என்ற நோய் மிக்சோ வைரஸ் பரோடிடிஸ் என்ற வைரஸ்–ஆல் ஏற்படுகிறது. இந்நோய் சுவாசக் குழாயை பாதிக்கிறது.**

88) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க.

A) திராட்சை பழம் – சாக்கரோமைசிஸ்

B) காஃபி மற்றும் கோக்கோ – ஃபேசில்லஸ் மெகாடெரியம்

C) தயிர் – லாக்டோஃபேசில்லஸ்

**D) ஈஸ்ட் – வைட்டமின் A**

**விளக்கம்: திராட்சை பழம் சாக்கரோமைசிஸ் கொண்டு நொதிக்க வைத்து தயாரிக்கப்படுகின்றன**

**காஃபி மற்றும் கோக்கோ போன்றவற்றை ஃபேசில்லஸ் மெகாடெரியம் என்ற பாக்டீரியாவைப் பயன்படுத்தி நொதிக்க வைக்கப்படுகின்றன**

**லாக்டோஃபேசில்லஸ் என்ற சிற்றினங்கள் பாலினை தயிராக மாற்றுகின்றன**

**ஈஸ்ட்கள் வைட்டமின் B கூட்டுப்பொருள்களை(காம்ப்ளக்ஸ்) அதிகம் உற்பத்தி செய்யும் ஆதாரங்களாக உள்ளன.**

89) கீழ்க்கண்டவற்றுள் எது சிறு குடலை பாதிக்கிறது?

A) காலரா

**B) டைபாய்டு**

C) போலியோ

D) மலேரியா

**விளக்கம்: டைபாய்டு (குடல்சார் காய்ச்சல்) சிறுகுடலை பாதிக்கிறது. இது சால்மோனெல்லா டைஃபி என்ற பாக்டீரியாவால் நீர் மூலம் பரவுகிறது.**

90) கீழ்க்கண்டவற்றில் எது பாலை தயிராக மாற்றுகிறது?

A) சாக்கரோமைசிஸ் செரிவிசே

B) ஃபேசில்லஸ் மெகாடெரியம்

**C) லாக்டோஃபேசில்லஸ்**

D) ஆஸ்பர்ஜிலஸ்

**விளக்கம்: லாக்டோஃபேசில்லஸ் என்ற சிற்றினங்கள் பாலினை தயிராக மாற்றுகின்றன.**

91) கூற்றுகளை ஆராய்க.

1. மிக்சோ வைரஸ்–ஆல் ஏற்படும் நோய் தட்டம்மை

2. பொன்னுக்கு வீங்கி என்ற நோய் நுரையீரலை பாதிக்கிறது

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

**D) இரண்டும் தவறு**

**விளக்கம்: மிக்சோ வைரஸ்–ஆல் ஏற்படும் நோய் – இன்ஃபுளுயன்சா**

**தட்டம்மை ரூபெல்லா வைரஸ்–ஆல் ஏற்படுகிறது.**

**பொன்னுக்கு வீங்கி என்ற நோயால் பாதிக்கப்படும் உறுப்பு – மேல் சுவாக் குழாய்.**

**நுரையீரல் – காசநோய் வருவதால் பாதிக்கப்படும் உறுப்பு ஆகும்.**

92) கூற்றுகளை ஆராய்க.

1. ஆந்த்ராக்ஸ் என்ற நோயானது செம்மறி ஆடுகளில் காணப்பட்டது.

2. நோயினைக் கடத்தும் காரணிகளைக் கொண்டு பாக்டீரியா, வைரஸ், பூஞ்சை அல்லது புரோட்டோசோவாக்களால் கடத்தும் நோய்கள் எனப் பிரிக்கப்பட்டுள்ளன.

**A) 1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. ஆந்த்ராக்ஸ் என்ற நோயானது செம்மறி ஆடுகளில் காணப்பட்டது.**

**2. நோயினைக் கடத்தும் காரணிகளைக் கொண்டு காற்றின் மூலம், நீரின் மூலம் அல்லது கடத்திகள் (கொசு போன்ற) மூலம் பரவும் நோய்கள் எனப் பிரிக்கப்பட்டுள்ளன.**

93) மலேரியா கீழ்க்கண்ட எதன் மூலம் பரப்பப்படுகிறது?

A) வைரஸ்

B) பாக்டீரியா

C) பூஞ்சை

**D) புரோட்டோசோவா**

**விளக்கம்: வளர்ந்து வரும் நாடுகளில் மிகவும் முக்கியமானதொரு சுகாதாரப் பிரச்சனையாக மலேரியாவானது தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கிறது. பிளாஸ்மோடியம் என்ற புரோட்டோசோவாவைச் சார்ந்த ஒட்டுண்ணியால் இது ஏற்படுகிறது.**

94) உலக மலேரியா தினம் எப்போது கடைபிடிக்கப்படுகிறது?

**A) ஏப்ரல் 25**

B) ஏப்ரல் 7

C) மார்ச் 22

D)டிசம்பர் 23

**விளக்கம்: ஏப்ரல் 25 – உலக மலேரியா தினம்**

**ஏப்ரல் 7 – உலக சுகாதார தினம்**

**மார்ச் 22 – உலக தண்ணீர் தினம்**

**டிசம்பர் 23 – தேசிய விவசாயிகள் தினம்.**

95) புவியின் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரே நேரத்தில் தோன்றி அதிகமான எண்ணிக்கையில் மக்களைப் பாதிக்கும் வகையைச் சேர்ந்த நோய் எது?

**A) கொள்ளை நோய்**

B) பெருங்கொள்ளை நோய்

C) தொடர்ச்சியற்ற நோய்

D) வட்டார நோய்

**விளக்கம்: புவியின் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரே நேரத்தில் தோன்றி அதிகமான எண்ணிக்கையில் மக்களைப் பாதிக்கும் வகையைச் சேர்ந்த நோய் கொள்ளை நோய். எ.கா. இன்புளுயென்சா.**

96) மலேரிய ஒட்டுகளில் கொடியதும், உயிரைப் பறிக்கக் கூடியது எது?

A) பிளாஸ்மோடியம் வைவாக்ஸ்

B) பிளாஸ்மோடியம் மலேரியே

**C) பிளாஸ்மோயடிம் ஃபால்ஸிபேரம்**

D) பிளாஸ்மோடியம் ஓவேல்

**விளக்கம்: மலேரிய ஒட்டுகளில் பிளாஸ்மோயடிம் ஃபால்ஸிபேரம் என்பது மிகவும் கொடியதும், உயிரைப் பறிக்கக் கூடியதும் ஆகும்.**

97) கீழ்க்கண்டவற்றில் மலேரியாவைப் பற்றிய தனது ஆய்விற்கு புகழ்பெற்றவர் யார்?

**A) சர் ரொனால்ட் ராஸ்**

B) இராபர்ட் கோச்

C) இராபர்ட் கோஃ

D) ஆன்டன் வான் லூவன்ஹ{க்

**விளக்கம்: சர் ரொனால்ட் ராஸ் என்பவர் இந்தியாவில் பிறந்த பிரிட்டிஷ் மருத்துவராவார். இவர் மலேரியாவைப் பற்றிய தனது ஆய்விற்கு புகழ் பெற்றவர். இவர் இந்திய மருத்துவத்துறையில் 25 ஆண்டுகள் பணியாற்றினார்.**

98) கீழ்க்கண்டவற்றில் எது பரவும் தன்மையுடைய நோய் அல்ல?

A) இன்புளுயென்சா

B) காசநோய்

C) நிமோனியா

**D) முன் கழுத்துக் கழலை நோய்**

**விளக்கம்: தொற்றும் தன்மையுடைய நோய்கள்:**

**1. இன்புளுயென்சா**

**2. காசநோய்**

**3. பெரியம்மை**

**4. காலரா**

**5. நிமோனியா**

**6. மலேரியா**

**தொற்றும் தன்மையற்ற நோய்:**

**1. நீரழிவு நோய்**

**2. புற்றுநோய்**

**3. இதயம் சார்ந்த நோய்கள்**

**4. உடல் பருமன்**

**5. முன் கழுத்துக் கழலை**

99) மலேரியா, பிளாஸ்மோடியம் என்ற புரோட்டோசோவாவைச் சேர்ந்த ஒட்டுண்ணியால் ஏற்படுகிறது. கீழ்க்கண்டற்றில் எது அதன் வகை அல்ல?

A) பிளாஸ்மோடியம் வைவாக்ஸ்

B) பிளாஸ்மோடியம் மலேரியே

C) பிளாஸ்மோடியம் ஃபால்ஸிபேரம்

**D) பிளாஸ்மோடியம் டைஃபி**

**விளக்கம்: பிளாஸ்மோடியத்தின் வகைகள்:**

**பிளாஸ்மோடியம் வைவாக்ஸ்**

**பிளாஸ்மோடியம் மலேரியே**

**பிளாஸ்மோடியம் ஃபால்ஸிபேரம்**

**பிளாஸ்மோடியம் ஓவேல்**

100) மலேரியா எந்த வகை கொசுவினால் பரவக்கூடியது?

A) பிளாஸ்மோடியம்

B) கியூலக்ஸ்

**C) அனாபிலெஸ்**

D) ஃபிலேரியா

விளக்கம்: மலேரியாவானது பிளாஸ்மோடியம் என்ற புரோட்டோசோவாவைச் சேர்ந்த ஒட்டுண்ணியால் ஏற்படுகிறது. இது அனோபிலெஸ் பெண் கொசுவால் பரவுகிறது.

101) காசநோயை ஏற்படுத்தும் பாக்டீரியாக்கள் எந்த உடல் உறுப்பை பாதிக்கின்றன?

**A) நுரையீரல்**

B) சிறுநீரகம்

C) கல்லீரல்

D) இதயம்

**விளக்கம்: காசநோயை ஏற்படுத்தும் பாக்டீரியாக்கள் நுரையீரல் செல்களை சேதப்படுத்துகின்றன. தொடர் இருமல், நெஞ்சுவலி, உடல்எடை குறைவு மற்றும் பசியின்மை போன்றவை காசநோயின் அறிகுறிகளாகும்.**

102) கூற்று: 1902–ல் நோபல் பரிசு பெற்றவர் சர் ரொனால்ட் ராஸ்

காரணம்: உடலியல் அல்லது மருத்துவத்துறைகளில், மலேரியா பரவும் விதம் பற்றி ஆராய்ந்தவர் சர் ரொனால்ட் ராஸ்

**A) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம்**

B) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

C) கூற்று சரி, காரணம் தவறு

D) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**விளக்கம்: உடலியல் அல்லது மருத்துவத்துறைகளில், மலேரியா பரவும் விதம் பற்றிய தனது கண்;டுபிடிப்புக்காக 1902–ஆம் ஆண்டு சர் ரொனல்ட் ராஸ்–க்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.**

103) உலகம் முழுவதும் ஒவ்வொரு வருடமும் தோராயமாக எத்தனை மக்கள் மலேரியா நோயால் பாதிக்கப்படுகின்றனர்?

A) 200 மில்லியன்

**B) 300 மில்லியன்**

C) 200 பில்லியன்

D) 300 பில்லியன்

**விளக்கம்: உலகம் முழுவதும் கணக்கிடும்போது ஒவ்வொரு வருடமும் சுமார் 300 மில்லியன் மக்கள் மலேரியா நோயினால் பாதிக்கப்படுகின்றனர். இது மனிதனுக்கு மிகவும் அபாயகரமானதாக இருந்தாலும் குணப்படுத்தக்கூடிய நோயாகும்.**

104) எந்த மாத்திரையின் பயன்பாடு மலேரியா ஒட்டுண்ணிகளைக் கொல்கிறது?

A) பாரசிட்டமால்

**B) குயினைன்**

C) குவானைன்

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: இந்நோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகமான வியர்வை ஏற்படுவதைத் தொடர்ந்து காய்ச்சல் குறைகிறது. குயினைன் மாத்திரைகளின் பயன்பாடு மலேரியா ஒட்டுண்ணிகளைக் கொல்கிறது.**

105) கூற்றுகளை ஆராய்க.

1. சிக்குன்குனியா என்ற நோயானது ஒற்றை இழை ஆர்.என்.ஏ என்ற வைரஸால் ஏற்படுத்தப்படுகிறது.

2. காலரா ஒரு அதீத வயிற்றுப்போக்கு நோயாகும்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. சிக்குன்குனியா என்ற நோயானது ஒற்றை இழை ஆர்.என்.ஏ என்ற வைரஸால் ஏற்படுத்தப்படுகிறது.**
**2. காலரா ஒரு அதீத வயிற்றுப்போக்கு நோயாகும்.**

106) டெங்கு காய்ச்சல் எந்த நுண்ணுயிரியால் ஏற்படுகிறது?

**A) வைரஸ்**

B) பாக்டீரியா

C) பூஞ்சை

D) புரோட்டோசோவா

**விளக்கம்: டெங்கு காய்ச்சலானது வைரஸினால் ஏற்படுகிறது. இந்த நோயானது ஏற்கனவே இந்நோயினால் தாக்கப்பட்டவரை ஏடிஸ் எய்ஜிப்டி என்ற கொசு கடித்து பின்னர் ஆரோக்கியமானவரைக் கடிப்பதால் பரவுகிறது.**

107) ஆர்.வி. 144 என்பது கீழ்க்கண்ட எதனுடன் தொர்புடையது?

A) காலரா

B) மலேரியா

C) டைபாய்டு

**D) எய்ட்ஸ்**

**விளக்கம்: எச்.ஐ.வி நோயானது இரத்த வெள்ளையணுக்களைத் தாக்கி உடலை தானாகவே நோயினை எதிர்க்கும் திறனைக் குறைக்கிறது. இந்நோய் பாதிப்பிற்கு எய்ட்ஸ் தடுப்பூசி ஆர்.வி. 144 என்ற மருந்தானது தாய்லாந்து நாட்டில் 2003–ஆம் ஆண்டு சோதனைகாக வழங்கப்பட்டது.**

108) கூற்று: மலேரியாவானது கொசுவினால் தான் பரவுகிறது

காரணம்: மலேரியா ஒட்டுண்ணியின் வளரும் நிலைகளானது கொசுவின் இரைப்பை–குடல்வழிப் பகுதியில் நடைபெறுகிறது

**A) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம்**

B) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

C) கூற்று சரி, காரணம் தவறு

D) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**விளக்கம்: மலேரியா ஒட்டுண்ணியின் வளரும் நிலைகளானது கொசுவின் இரைப்பை–குடல்வழிப் பகுதியில் நடைபெறுகிறது எனவும், எனவே மலேரியாவானது கொசுவினால் தான் பரவுகிறது என நிரூபித்தவர் சர் ரொனால்ட் ராஸ்.**

109) கீழ்க்கண்டவற்றில் எந்த நோய் வீட்டு ஈக்களால் பரப்பப்படுகிறது?

**A) டைபாய்டு**

B) போலியோ

C) சிக்கன் குனியா

D) இன்ஃபுளுயென்சா

**விளக்கம்: காலரா மற்றும் டைபாய்டு ஆகிய நோய்கள் வீட்டு ஈக்கள் மூலம் பரப்பப்படுகிறது.**

**காலரா ஒரு அதீத வயிற்றுப்போக்கு நோயாகும்**

**டைபாய்டு ஒரு குடல்சார் காய்ச்சல் ஏற்படுத்தும் நோயாகும்.**

110) ரூபெல்லா வைரஸ்–ஆல் எந்த நோய் ஏற்படுகிறது?

**A) தட்டம்மை**

B) பொன்னுக்கு வீங்கி

C) சின்னம்மை

D) இன்புளுயென்சா

**விளக்கம்: ரூபெல்லா வைரஸ்–ஆல் தட்டம்மை என்ற நோய் ஏற்படுகிறது. இது சுவாசக் குழாயைப் பாதிக்கிறது.**

111) சின்னம்மை எந்த வைரஸ்–ஆல் ஏற்படுகிறது?

A) மிக்சோ வைரஸ்

B) வாரிசெல்லா ஸோஸ்டர்

C) ரூபெல்லா வைரஸ்

**D) ஸோஸ்டர் வைரஸ்**

**விளக்கம்: சின்னம்மை ஸோஸ்டர் வைரஸ்–ஆல் ஏற்படுகிறது. இந்நோய் சுவாசக் குழாயைப் பாதிக்கிறது. இதன் அறிகுறிகள்: 1. தோலில் ஏற்படும் வீக்கம் (கொப்பளம்), காய்ச்சல்.**

112) கியூலக்ஸ் என்ற கொசு இனம் கடிப்பதனால் ஏற்படும் நோய்?

**A) ஃபிலேரியா**

B) டெங்கு காய்ச்சல்

C) மலேரியா

D) சிக்கன் குனியா

**விளக்கம்: இந்தியாவில் ஃபிலேரியா ஒரு முக்கியமான ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினையாகும். இந்த நோய் நூல் போன்ற புழுவாகிய நெமடோடுகள்) உச்சரேரியா பான்க்ராப்டீ என்ற புழுவினால் ஏற்படுகின்றது. இது கியூலக்ஸ் என்ற கொசு இனம் கடிப்பதன் மூலம் இது கடத்தப்படுகிறது.**

113) கல்லீரலில் வீக்கத்தை ஏற்படுத்தும் நோய் எது?

A) போலியோ மைலிடிஸ்

**B) ஹெப்பாடைட்டிஸ் ஏ**

C) டைபாய்டு

D) காலரா

**விளக்கம்: ஹெப்பாடைட்டிஸ் ஏ அல்லது நோய் தொற்றக்கூடிய ஹெப்பாடைட்டிஸ் கல்லீரலில் வீக்கத்தை உண்டாக்குகிறது.**

114) கீழக்கண்டவற்றில் எந்த நோய் ஏடிஸ் எய்ஜிப்டி என்ற கொசுவினால் பரப்பப்படுகிறது?

A) சிக்குன்குனியா

B) டெங்கு

C) மலேரியா

**D) A மற்றும் B**

**விளக்கம்: சிக்குன்குனியா மற்றும் டெங்கு ஆகியவை ஏடிஸ் எய்ஜிப்டி என்ற கொசு கடிப்பதால் பரப்பப்படுகிறது. மலேரியா பெண் அனாபிலஸ் கொசு மூலம் பரவுகிறது.**

115) எலும்பு முறிப்பு காய்ச்சல் என்று அழைக்கப்படுவது எது?

A) காலரா

**B) டெங்கு**

C) டைபாய்டு

D) சிக்கன்குனியா

**விளக்கம்: எலும்பு முறிப்பு காய்ச்சல் என அழைக்கப்படுவது டெங்கு. மூட்டுகளிலும் தசைநார்களிலும் கடுமையான வலி தோன்றுவதால், இதற்கு எலும்பு முறிப்பு காய்ச்சல் என்று பெயர்.**

116) ஃபிலேரியா புழுவினால் கீழ்க்கண்ட எந்த நோய் ஏற்படுகிறது?

A) உச்சரேரியா பான்க்ராப்டீ

B) டெங்கு காய்ச்சல்

C) இன்ஃபுளுயன்சா

**D) யானைக்கால் நோய்**

**விளக்கம்: ஃபிலேரியா புழுவின் அடைகாக்கும் நாட்கள் 8-16 மாதங்கள் ஆகும். இக்கால கட்டத்தில் கடுமையான தொற்று, காய்ச்சல் மற்றும் நிணநீர் சுரப்பிகள் வீக்கமடைதல் ஆகிய அறிகுறிகள் வெளிப்படுகின்றன. நாள்பட்ட தொற்றின் முக்கிய வெளிப்பாடு யானைக்கால் நோயாகும்.**

117) உலக காசநோய் எதிர்ப்பு தினம் எப்போது கடைபிடிக்கப்படுகிறது?

A) ஏப்ரல் 7

B) ஏப்ரல் 25

C) டிசம்பர் 1

**D) மார்ச் 24**

**விளக்கம்: மார்ச் 24 – உலக காசநோய் எதிர்ப்பு தினம்**

**ஏப்ரல் 7 – உலக சுகாதார தினம்**

**ஏப்ரல் 25 – உலக மலேரியா தினம்**

**டிசம்பர் 1 – உலக எய்ட்ஸ் தினம்.**

118) காசநோய் என்பது எந்த வகையான நுண்ணுயிரிகளால் ஏற்படுகிறது?

A) வைரஸ்

**B) பாக்டீரியா**

C) பூஞ்சை

D) புரோட்டோசோவா

**விளக்கம்: காசநோய் என்பது ஒரு வகையான பாக்டீரிய நோயாகும். எடுத்துக்காட்டாக நுரையீரல் சார்ந்த காசநோயை ஏற்படுத்தும் பாக்டீரியாக்கள் நுரையீரல் செல்களை சேதப்படுத்துகின்றன.**

119) ரோட்டா வைரஸ்–ஆல் ஏற்படும் நோய்?

A) போலியோ மைலிடிஸ்

B) ஹெப்பாடைட்டிஸ் ஏ

**C) அதீத வயிற்றுப்போக்கு**

D) காலரா

**விளக்கம்: ரோட்டா வைரஸ்–ஆல் ஏற்படும் நோய் அதீத வயிற்றுப்போக்கு ஆகும். சரியான சுத்தமும் சுகாதாரமும் இந்நோயை தடுக்கும் வழிமுறையாகும்.**

120) கீழ்க்கண்டவற்றில் எது மத்திய நரம்பு மண்டலத்தை பாதிக்கும் நோய் ஆகும்?

**A) போலியோ மைலிடிஸ்**

B) ஹெப்பாடைட்டிஸ் ஏ

C) டைபாய்டு

D) காலரா

**விளக்கம்: போலியோ மைலிடிஸ் என்ற நோயால் பாதிக்கப்படும் உறுப்பு – மத்திய நரம்பு மண்டலமாகும். இந்நோயை தடுக்க சால்க் என்ற தடுப்பு மருந்து அல்லது வாய்வழி போலியோ தடுப்பு மருந்து உண்ண வேண்டும்.**

121) மலேரியா கொசுவினால் தான் பரவுகிறது என நிரூபித்தவர் யார்?

**A) சர் ரொனால்ட் ராஸ்**

B) இராபர்ட் கோச்

C) இராபர்ட் கோஃ

D) ஆன்டன் வான் லூவன்ஹக்

**விளக்கம்: சர் ரொனால்ட் ராஸ் மலேரியாவைப் பற்றிய தனது ஆய்விற்கு புகழ் பெற்றவர். தனது ஆராய்ச்சியின் விளைவாக, மலேரியா ஒட்டுண்ணியின் வளரும் நிலைகளானது கொசுவின் இரைப்பை–குடல்வழிப் பகுதியில் நடைபெறுகிறது எனவும், எனவே மலேரியாவானது கொசுவினால் தான் பரவுகிறது எனவும் நிரூபித்தார்.**

122) போர்டெடெல்லா பெர்டுசிஸ் என்ற பாக்டீரியாவால் ஏற்படும் நோய் எது?

A) காநோய்

B) தொண்டை அழற்சி நோய்

**C) கக்குவான் இருமல்**

D) பொன்னுக்கு வீங்கி

**விளக்கம்: போர்டெடெல்லா பெர்டுசிஸ் என்ற பாக்டீரியாவால் ஏற்படும் நோய் – கக்கவான் இருமல். இது சுவாசக் குழாய் பகுதிகளை பாதிக்கிறது.**

123) சாதாரண சளியை ஏற்படுத்தும் வைரஸ்?

A) மிக்சோ வைரஸ்

B) வாரிசெல்லா ஸோஸ்டர்

C) ரூபெல்லா வைரஸ்

**D) ரைனோ வைரஸ்**

**விளக்கம்: ரைனோ வைரஸ் சாதாரண சளியை ஏற்படுத்துகிறது. காய்ச்சல், இருமல், மூக்கிலிருந்து ஒழுகுதல், தும்மல் மற்றும் தலைவலி போன்றவை இதன் அறிகுறிகளாகும்.**

124) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

**A) டைபாய்டு**

B) சாதாரண சளி

C) இன்ஃபுளுயென்சா

D) தட்டம்மை

**விளக்கம்: டைபாய்டு என்பது நீர் மூலம் பரவும் நோய் ஆகும். ஆனால் சாதாரண சளி, இன்ஃபுளுயென்சா, தட்டம்மை போன்றவை வைரஸ்–ஆல் பரவும் நோயாகும்.**

125) மலேரியா பற்றிய கூற்றுகளை ஆராய்க

1. இந்நோய் அனாபிளஸ் பெண் கொசு கடிப்பதன் மூலம் பரவுகிறது.

2. பிளாஸ்மோடியம் என்ற வைரஸ்–ஆல் இந்நோய் ஏற்படுகிறது.

3. பிளாஸ்மோடியம் ஃபால்ஸிபேரம் என்பது மிகவும் கொடியதும், உயிரைப் பறிக்கக் கூடியதும் ஆகும்.

4. இது மனிதனுக்கு மிகவும் அபாயகரமானது. குணப்படுத்த இயலாத நோய் ஆகும்

A) 1, 2 சரி

**B) 1, 3 சரி**

C) 2, 3 சரி

D) 3, 4 சரி

**விளக்கம்: 1. இந்நோய் அனாபிளஸ் பெண் கொசு கடிப்பதன் மூலம் பரவுகிறது.**

**2. பிளாஸ்மோடியம் என்ற புரோட்டோசோவாவால் இந்நோய் ஏற்படுகிறது.**

**3. பிளாஸ்மோடியம் ஃபால்ஸிபேரம் என்பது மிகவும் கொடியதும், உயிரைப் பறிக்கக் கூடியதும் ஆகும்.**

**4. இது மனிதனுக்கு மிகவும் அபாயகரமானதாக இருந்தாலும் இது குணப்படுத்தக்கூடிய நோய் ஆகும்**

126) சிக்கன்குனியாவை பரப்பும் கொசு எது?

A) பெண் அனாபிளஸ் கொசு

**B) ஏடிஸ் எய்ஜிப்டி**

C) உச்சரேரியா பான்க்ராப்டீ

D) கியூலக்ஸ்

**விளக்கம்: சிக்கன்குனியா என்ற நோயானது பாதிக்கப்பட்ட ஏடிஸ் எய்ஜிப்டி என்ற கொசு பகல்நேரத்தில் மனிதர்களைக் கடிப்பதால் பரப்பப்படுகிறது.**

127) கூற்றுகளை ஆராய்க.

1. ஃபிலேரியா என்ற நோய் உச்சரேரியா பான்க்ராப்டீ என்ற புழுவினால் ஏற்படுகின்றது.

2. இந்நோய் ஏடிஸ் எய்ஜிப்டி என்ற கொசு இனம் கடிப்பதன் மூலம் இது கடத்தப்படுகிறது

**A) 1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. ஃபிலேரியா என்ற நோய் உச்சரேரியா பான்க்ராப்டீ என்ற புழுவினால் ஏற்படுகின்றது.**

**2. இந்நோய் கியூலக்ஸ் என்ற கொசு இனம் கடிப்பதன் மூலம் இது கடத்தபடுகிறது.**

128) பன்றிக்காய்ச்சல் எப்போது கண்டறியப்பட்டது?

A) 2008 ஏப்ரல்

**B) 2009 ஏப்ரல்**

C) 2010 ஏப்ரல்

D) 2007 ஏப்ரல்

**விளக்கம்: 2009–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பன்றிக்காய்ச்சலானது கண்டறியப்பட்டது. இந்நோய் மில்லியன் மக்களைத் தாக்கியது.**

129) பன்றிக்காய்ச்சலானது கீழ்க்கண்ட எதன் மூலம் பரவுகிறது?

A) பாக்டீரியா

**B) வைரஸ்**

C) பூஞ்சை

D) புரோட்டோசோவா

**விளக்கம்: பன்றிக்காய்ச்சலானது ஒரு வைரஸ் நோய் ஆகும். இன்ஃபுளுயன்சா வைரஸ் எச் 1 என் 1 உயிரிதான் இந்த நோய் பரவுவதற்கு காரணமாக உள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது.**

130) எந்த ஆண்டு செம்மறி ஆடுகளில் காணப்பட்ட ஆந்த்ராக்ஸ் என்ற நோயானது பேசில்லஸ் ஆந்தராசிஸ் என்ற உயிரியால் உருவாகிறது என்பதைச் சுட்டிக்காட்டினார் இராபர்ட் கோஃ?

A) 1879

**B) 1876**

C) 1878

D) 1877

**விளக்கம்: 1876–ஆம் ஆண்டு செம்மறி ஆடுகளில் காணப்பட்ட ஆந்த்ராக்ஸ் என்ற நோயானது பேசில்லஸ் ஆந்தராசிஸ் என்ற உயிரியால் உருவாகிறது என்பதைச் சுட்டிக்காட்டினார் இராபர்ட் கோஃ என்னும் ஜெர்மானிய மருத்துவர்.**

131) பறவை இன்ஃபுளுயென்சா வைரஸ் எந்த ஆண்டு தோன்றியது?

**A) 1996**

B) 2009

C) 1998

D)2010

**விளக்கம்: பறவை இன்ஃபுளுயென்சா வைரஸ் எனப்படும் எச் 5 என் 1 1996–ஆம் ஆண்டு தோன்றியது. இது பறவைகளில் தோன்றி மனிதர்களுக்கு பரவும் ஒரு வகையான நோயாகும்.**

132) பறவை இன்ஃபுளுயென்சா வைரஸ் நோயின் வெளிப்பாடு முதலாவதாக மனிதனில் எந்த ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது?

A) 1996

**B) 1997**

C) 2003

D) 2009

**விளக்கம்: 1997–ஆம் ஆண்டு பறவை இன்ஃபுளுயென்சா வைரஸ் உலக சுகாதார நிறுவனத்தால் முதலாவதாக மனிதனில் கண்டுபிடிக்கப்பட்டது. 2003–ஆம் ஆண்டு டிசம்பரில் முதன்முதலில் இந்நோயின் வெளிப்பாடு அறியப்பட்டது.**

133) கூற்று: பிரீயான்கள் நரம்புத் திசுக்களை சீர்குலைவடையச் செய்கின்றன.

காரணம்: இவை சாதாரணமான புரதங்களில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

**A) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம்**

B) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

C) கூற்று சரி, காரணம் தவறு

D) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**விளக்கம்: பிரீயான்கள் சாதாரணமான புரதங்களில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இந்த நிலை நரம்புத் திசுக்களை சீர்குலைவடையச் செய்கின்றன.**

134) எய்ட்ஸ் நோய் மனிதனின்___________________ஐ தாக்கி உடலினை பலவீனமடையச் செய்யும்?

A) இரத்த தட்டுக்கள்

**B) .இரத்த வெள்ளையணுக்கள்**

C) இரத்த சிவப்பணுக்கள்

D) கல்லீரல்

**விளக்கம்: எய்ட்ஸ் நோய் மனிதனின் .இரத்த வெள்ளையணுக்கள் தாக்கி உடலினை பலவீனமடையச் செய்யும். இது ஒரு பெருங்கொள்ளை நோய் என்று அழைக்கப்படுகிறது.**

135) ஃபிலேரியா நோய் கீழ்க்கண்ட எந்த உறுப்பை தாக்கும்?

A) மைய நரம்பு மண்டலம்

**B) நிணநீர் மண்டலம்**

C) சிறுகுடல்

D) சுவாச பாதைகள்

**விளக்கம்: முதிர்சியடைந்த ஃபிலேரியா புழுக்கள் மனிதனின் நிணநீர் மண்டலத்தில் காணப்படுகின்றன. இதனால் நிணநீர் சுரப்பிகள் வீக்கமடைகின்றன.**

136) கூற்று: எலும்பு முறிப்பு காய்ச்சல் என அழைக்கப்படுவது டெங்கு.

காரணம்: மூட்டுகளிலும் தசைநார்களிலும் கடுமையான வலி தோன்றும்

**A) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம்**

B) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

C) கூற்று சரி, காரணம் தவறு

D) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**விளக்கம்: எலும்பு முறிப்பு காய்ச்சல் என அழைக்கப்படுவது டெங்கு. மூட்டுகளிலும் தசைநார்களிலும் கடுமையான வலி தோன்றுவதால், இதற்கு எலும்பு முறிப்பு காய்ச்சல் என்று பெயர்.**

137) எந்த ஆண்டு பன்றிக்காய்ச்சலானது உலக சுகாதார அமைப்பால் பெரும் கொள்ளை நோய் என்று அறிவிக்கப்பட்டது?

A) 2009 ஏப்ரல்

B) 2009 மே

**C) 2009 ஜுன்**

D) 2009 ஜுலை

**விளக்கம்: பன்றிக்காய்ச்சலானது பல மில்லியன் மக்களைத் தாக்கியதால் இது பெரும்கொள்ளை நோய் என்று உலக சுகாதார அமைப்பால் 2009 ஜுன் மாதம் அறிவிக்கப்பட்டது.**

138) இந்தியாவில் முதன் முதலில் எங்கு எச்.ஐ.வி நோயானது கண்டறியப்பட்டது?

A) கேரளா

B)ஆந்திரா

**C) தமிழ்நாடு**

D) கர்நாடாகா

**விளக்கம்: எச்.ஐ.வி நோயானது இரத்த வெள்ளையணுக்களைத் தாக்கி உடலினை தானாகவே நோயினை எதிர்க்கும் திறனைக் குறைக்கிறது. இந்தியாவில் முதன் முதலாக தமிழ்நாட்டில்தான் ஆதாரத்துடன் எய்ட்ஸ் பாதிப்பு கண்டறியப்பட்டது.**

139) பறவை இன்ஃபுளுயென்சா முதன் முதலில் எந்த நாட்டில் கண்டறியப்பட்டது?

**A) தெற்கு சீனா மற்றும் ஹாங்காங்**

B) ஜப்பான் மற்றும் சிங்கப்பூர்

C) மலேசியா மற்றும் பிரிட்டன்

D) ஈரான் மற்றும் ஈராக்

**விளக்கம்: பறவை இன்ஃபுளுயென்சா வைரஸ் எனப்படும் எச் 5 என் 1 வைரஸ் 1996–ஆம் ஆண்டு தோன்றியது. இந்த வைரஸால் தெற்கு சீனா மற்றும் ஹாங்காங்கில் முதன் முதலில் நோய் தோன்றியதாக கண்டறியப்பட்டது.**

140) தவறான ஒன்றை தெரிவு செய்க.

A) ரொட்டிக்காளான் என்பது ஒரு செல் உயிரி

**B) ஒரு செல் உயிரிகளில் தாலஸ் என்பது மைசீலியம் என்று அழைக்கப்படுகிறது**

C) மைசீலியம் என்பது பல நுண்ணிய நூல்வடிவ ஹைஃபே என்ற இழைகளின் தொகுப்பாகும்

D) ஒவ்வொரு ஹைஃபாக்களும் 5 முதல் 10 மைக்ரோ மீட்டர் அகலமுடையவை.

**விளக்கம்: ரொட்டிக்காளான்(ஈஸ்ட்) என்பது ஒரு செல் உயிரி**

**பல செல் உயிரிகளில் தாலஸ் என்பது மைசீலியம் என்று அழைக்கப்படுகிறது**

**மைசீலியம் என்பது பல நுண்ணிய நூல்வடிவ ஹைஃபே என்ற இழைகளின் தொகுப்பாகும்**

**ஒவ்வொரு ஹைஃபாக்களும் 5 முதல் 10 மைக்ரோ மீட்டர் அகலமுடையவை.**

141) கூற்று: எச்.ஐ.வி வைரஸ், நோய் எதிர்ப்பு குறைவுபடுத்தும் வைரஸ் என்று அழைக்கப்படுகிறது.

காரணம்: இரத்த சிவப்பணுக்களை அல்லது லிம்போசைட்டுகளைத் தாக்கி உடலினை பலவீனமடையச் செய்கிறது.

**A) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம்**

B) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

C) கூற்று சரி, காரணம் தவறு

D) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**விளக்கம்: எச்.ஐ.வி என்றால் மனித நோய் எதிர்ப்பு குறைவுபடுத்தும் வைரஸ் என்கிறோம். இந்த வைரஸ் இரத்த வெள்ளையணுக்களை அல்லது லிம்போசைட்டுகளைத் தாக்கி உடலினை பலவீனமடையச் செய்கிறது. மேலும் உடலில் தானாகவே நோயினை எதிர்க்கும் திறனைக் குறைக்கிறது.**

142) ஹெப்பாடைட்டிஸ் என்ற நோய் எந்த மனித உறுப்பை தாக்குகிறது?

A) சுவாசப்பாதை

**B) கல்லீரல்**

C) சிறுநீரகம்

D) இதயம்

**விளக்கம்: ஹெப்பாடைட்டிஸ் – பி அல்லது சீரம் ஹெப்பாடைட்டிஸ் நோய், எண்டிரோ வைரஸ் எனப்படும் ஹெப்படைடிஸ் பி வைரஸால்(எச்.பி.வி) ஏற்படுகிறது. இவ்வகை நோயினைப் பரப்பும் வைரஸானது கல்லீரல் செல்களைப் பாதித்து கடுமையான கல்லீரல் வீக்கத்தினை ஏற்படுத்துகிறது.**

143) பன்றிக்காய்ச்சல் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. இந்நோயை உருவாக்கும் வைரஸானது பன்றிகளிடமிருந்து உருவானதால் பன்றிக்காய்ச்சல் என இதற்கு பெயரிடப்பட்டது.

2. நோய்த்தடுப்பு ஆற்றல் மண்டலம் பலவீனமடைந்திருப்போருக்கு இந்த நோயின் பாதிப்பு மிக எளிதில் ஏற்படும்.

3. இந்த வைரஸானது சுவாசித்தலை தீவிரமாய் பாதிக்கும்.

4. இது நீரின் மூலம் பரவும் நோயாகும்

A) 1, 2 சரி

**B) 1, 2, 3 சரி**

C) 2, 3 சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. இந்நோயை உருவாக்கும் வைரஸானது பன்றிகளிடமிருந்து உருவானதால் பன்றிக்காய்ச்சல் என இதற்கு பெயரிடப்பட்டது.**

**2. நோய்த்தடுப்பு ஆற்றல் மண்டலம் பலவீனமடைந்திருப்போருக்கு இந்த நோயின் பாதிப்பு மிக எளிதில் ஏற்படும்.**

**3. இந்த வைரஸானது சுவாசித்தலை தீவிரமாய் பாதிக்கும்.**

**4. இது காற்றின் மூலம் பரவும் நோயாகும்.**

144) எந்த வைரஸ் காரணமாக பன்றிக்காய்ச்சல் பரவுகிறது?

**A) இன்ஃபுளுயன்சா வைரஸ் எச் 1 என் 1**

B) இன்ஃபுளுயன்சா வைரஸ் ஏ 1 என் 1

C) இன்ஃபுளுயன்சா வைரஸ் எச் 1 ஏ 1

D) மேற்கண்ட எதுவுமில்லை

**விளக்கம்: இன்ஃபுளுயன்சா வைரஸ் எச் 1 என் 1 என்ற உயிரிதான் பன்றிக்காய்ச்சல் பரவுவதற்குக் காரணமாக உள்ளது என கண்டறியப்பட்டுள்ளது.**

145) இன்ஃபுளுயன்சா (பறவைக்காய்ச்சல்) கீழ்க்கண்ட எதன் மூலம் பரவுகிறது?

**A) இன்ஃபுளுயென்சா வைரஸ் எச் 5 என் 1**

B) இன்ஃபுளுயென்சா வைரஸ் எச் 1 என் 1

C) இன்ஃபுளுயென்சா வைரஸ் எச் 1 என் 5

D) இன்ஃபுளுயென்சா வைரஸ் எச் 5 என் 5

**விளக்கம்: பறவைகளின் மூலம் பரவும் இன்ஃபுளுயென்சா (பறவைக்காய்ச்சல்) என்ற நோயானது, இன்ஃபுளுயென்சா வைரஸ் எச் 5 என் 1 என்ற வைரஸால் பரவுகிறது. இந்நோய்க் கிருமிகளின் அடைகாக்கும் காலம் 2 முதல் 7 நாட்களாகும்.**

146) எந்த ஆண்டு பறவை இன்ஃபுளுயென்சா வைரஸ் மனிதனில் கண்டுபிடிக்கப்பட்டது?

A) 1996

**B) 1997**

C) 2003

D) 2009

**விளக்கம்: 1997–ஆம் ஆண்டு பறவை இன்ஃபுளுயென்சா வைரஸ் உலக சுகாதார நிறுவனத்தால் முதலாவதாக மனிதனில் கண்டுபிடிக்கப்பட்டது.**

147) கீழ்க்கண்டவற்றில் எது கொல்லப்பட்ட தடுப்பூசி அல்ல?

**A) போலியோ**

B) டைபாய்டு

C) காலரா தடுப்பூசி

D) கக்குவான் தடுப்பூசி

**விளக்கம்: உயிருள்ள தடுப்பூசி:**

**1.வாய்வழி போலியோ தடுப்பூசி மருந்து**

**2. பிசிஜி தடுப்பூசி**

**கொல்லப்பட்ட தடுப்பூசி:**

**1. டைபாய்டு தடுப்பூசி**

**2. காலரா தடுப்பூசி**

**3. கக்குவான் தடுப்பூசி.**

148) தடுப்பூசியிடுதல் நிகழ்வை அறிமுப்படுத்தியவர்?

**A) எட்வர்டு ஜென்னர்**

B) லூயிஸ் பாஸ்டர்

C) இராபரட் கோஃ

D) இராபர்ட் கோச்

**விளக்கம்: தடுப்பூசியிடுதல் நிகழ்வை எட்வர்டு ஜென்னர் என்பவர் அறிமுகப்படுத்தினார். பொதுவாக தடுப்பூசி இரண்டு வகைப்படும். அவை**

**1. உயிருள்ள தடுப்பூசி**

**2. உயிரற்ற தடுப்பூசி.**

149) கூற்று: பன்றிக்காய்ச்சலானது 2009–ஆம் ஆண்டு ஜுன் மாதம் உலக சுகாதார அமைப்பால் பெரும் கொள்ளை நோய் என்று அறிவிக்கப்பட்டது

காரணம்: இந்தியாவில் 31000 மக்கள் இந்நோயால் பாதிக்கப்பட்டனர்

A) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம்

B) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

**C) கூற்று தவறு, காரணம் தவறு**

D) கூற்று தவறு மற்றும் காரணம் சரி.

**விளக்கம்: 2009–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பன்றிக்காய்ச்சலானது கண்டறியப்பட்டது. இந்நோய் பல மில்லியன் மக்களைத் தாக்கியது. எனவே, பன்றிக்காய்ச்சலானது 2009–ஆம் ஆண்டு ஜுன் மாதம் உலக சுகாதார அமைப்பால் பெரும் கொள்ளை நோய் என்று அறிவிக்கப்பட்டது.**

150) கீழ்க்கண்டவற்றில் எது டைபாய்டு மருந்து ஆகும்?

A) பிசிஜி

**B) டீ.ஏ.பி**

C) டீ.டீ

D) டி.டீ

**விளக்கம்: டீ.ஏ.பி என்ற தடுப்பு மருந்தானது, டைபாய்டு, பாராடைஃபி ஏ மற்றும் பாராடைஃபி பி போன்ற நோய்களுக்கான தடுப்பு மருந்தாகும்.**

151) எய்ட்ஸ் பாதிப்பை குணப்படுத்தும் தடுப்பூசி எந்த ஆண்டு சோதனைக்காக தாய்லாந்து நாட்டில் வழங்கப்பட்டது?

A) 2000

B) 1981

C) 1986

**D) 2003**

**விளக்கம்: எய்ட்ஸ் பாதிப்பை குணப்படுத்தும் எய்ட்ஸ் தடுப்பூசி ஆர்.வி 144 என்ற மருந்தானது தாய்லாந்து நாட்டில் சோதனைக்காக 2003–ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.**

152) காலரா, ஆந்தராக்ஸ் மற்றும் பிறநோய்களுக்கு மருந்து உருவாக்கியவர்?

A) எட்வர்டு ஜென்னர்

**B) லூயிஸ் பாஸ்டர்**

C) இராபரட் கோஃ

D) இராபர்ட் கோச்

**விளக்கம்: லூயிஸ் பாய்ஸ்டர் என்பவர் 18–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வேதியாலாளர் மற்றும் நுண்ணுயிரியலாளர் ஆவார். இவர் நோய்த் தடுப்பு மருந்தளித்தல் மற்றும் பாஸ்டுரைசேஷன் என்ற நிகழ்விற்கு பெயர் பெற்றவர். இவர் காலரா, ஆந்ராக்ஸ் மற்றும் பிற நோய்களுக்கு மருந்தை உருவாக்கினார்.**

153) எம்.எம்.ஆர் என்ற தடுப்பூசி கீழ்க்கண்ட எதற்கு பயன்படுத்தப்படுவதில்லை?

A) பொன்னுக்கு வீங்கி

B) தட்டம்மை

C) ரூபெல்லா

**D) தொண்டை அடைப்பான்**

**விளக்கம்: எம்.எம்.ஆர் :**

**1. பென்னுக்கு வீங்கி**

**2. தட்டம்மை**

**3. ரூபெல்லா தடுப்பு மருந்துகள் வைரஸ் தாக்கத்திற்கு எதிராக பாதுகாப்பை அளிக்கின்றன.**

154) டிபிடீ (மூன்று தடுப்பு நோய்) என்ற தடுப்பூசி கீழ்க்கண்ட எந்த நோயை குணப்படுத்தாது?

A) டிப்தீரியா

B) பெர்டூசிஸ்

C) டைட்டனஸ்

D) ரூபெல்லா

**விளக்கம்: டிபிடீ (மூன்று நோய் தடுப்பு) என்பது ஒரு கூட்டு தடுப்பு மருந்து ஆகும். இது கீழ்க்கண்ட மூன்று நோய்களைத் தடுக்க பயன்படுகிறது.**

**1. டிப்தீரியா (தொண்டை அடைப்பான்)**

**2. பெர்டூசியஸ் (கக்குவர் இருமல்)**

**3. டெட்னஸ்.**

155) கீழ்க்கண்டவற்றில் எது காசநோயை குணப்படுத்தப் பயன்படுகிறது?

**A) பிசிஜி**

B) டிபிடீ

C) எம்.எம்.ஆர்

D) டி.டீ

**விளக்கம்: பிசிஜி (பேசில்லஸ் கால்மெட்டெகுயிரின்) என்ற மருந்தானது, கால்மெட்டே மற்றும் குயிரின் என்ற இரு பிரான்சு நாட்டு ஊழியர்களால் 1908 முதல் 1921 வரை, 13 ஆண்டுகளின் முடிவில் உருவாக்கப்பட்டது. பேசில்லையானது வலு குறைக்கப்பட்ட, காசநோய்க்கெதிரான நோய்த் தடுப்பு திறனூட்டலாக பயன்படுத்தப்படுகிறது.**

156) ஜென்னரின் தடுப்பூசி மனித குலத்தினிடையே இருந்த எந்த நோயை குணப்படுத்த உதவியது?

A) சின்னம்மை

B) தட்டம்மை

**C) பெரியம்மை**

D) போலியோ

**விளக்கம்: தடுப்பூசியிடுதல் நிகழ்வை எட்வர்டு ஜென்னர் என்பவர் அறிமுகப்படுத்தினார். உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி, மனித குலத்தினிடையே இருந்த பெரியம்மையானது ஜென்னரின் தடுப்பூசி மூலம் முழுவதுமாக அழிக்கப்பட்டுவிட்டது.**

157) கீழ்க்கண்டவற்றில் எது பாக்டீரியாவின் நச்சாகும்?

A) பிசிஜி

B) டிபிடீ

**C) டீ.டீ**

D) டி.டீ

**விளக்கம்: டீ.டீ(டெட்டனஸ் டாக்சாய்டு) என்பது டெட்டனஸ் பாக்டீரியாவின் நச்சாகும்.**

158) பப்பாளி இலைக்கொழுந்து சாறு மற்றும் நிலவேம்பு கசாயம் போன்றவை எதற்கு பயன்படுகிறது?

A) இரத்த சிவப்பணு எண்ணிக்கையை அதிகரிக்க

B) இரத்த வெள்ளையணுக்கள் எண்ணிக்கையை அதிகரிக்க

**C) இரத்த தட்டுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க**

D) பித்த நீர் மற்றும் கணைய நீர் சுரப்பை அதிகரிக்க

விளக்கம்: பப்பாளி இலைகளின் கொழுந்திலிருந்து எடுக்கப்பட்டு வடிகட்டப்பட்ட திரவம் மற்றும் நிலவேம்பு கசாயம் ஆகியவை டெங்கு நோய் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு கொடுக்கப்படுகிறது. இது இரத்த தட்டுகளின் எண்ணிக்கை அதிகரிப்பதாக அறியப்பட்டுள்ளது.

159) இந்தியாவில் முதன் முதலில் தமிழ்நாட்டில் எப்போது எச்.ஐ.வி நோயானது கண்டறியப்பட்து?

A) 1990

B)1981

**C)1986**

D) 1994

**விளக்கம்: எச்.ஐ.வி நோயானது இரத்த வெள்ளையணுக்களைத் தாக்கி உடலினை தானாகவே நோயினை எதிர்க்கும் திறனைக் குறைக்கிறது. இந்தியாவில் முதன் முதலாக தமிழ்நாட்டில்தான் 1986–ல் ஆதாரத்துடன் எய்ட்ஸ் பாதிப்பு கண்டறியப்பட்டது.**

160) எச்.வி.ஐ நோயானது முதன் முதலில் எந்த நாட்டில் கண்டறியப்பட்டது?

A) இங்கிலாந்து

**B) அமெரிக்கா**

C) இந்தியா

D) பிரான்ஸ்

**விளக்கம்: எச்.ஐ.வி நோயானது முதன்முதலில் அமெரிக்காவில் ஹட்டாய் என்ற இடத்தில் 1981–ஆம் ஆண்டு கண்டுனரப்பட்டது.**

161) எந்த ஆண்டு உலக சுகாதார நிறுவனம் குழந்தைகளுக்கான நோய் எதிர்ப்பு திறனூட்டல் அட்டவணையை வழங்கியது?

**A) 1970**

B) 1980

C) 1990

D) 2000

**விளக்கம்: 1970–ஆம் எந்த ஆண்டு உலக சுகாதார நிறுவனம் குழந்தைகளுக்கான நோய் எதிர்ப்பு திறனூட்டல் அட்டவணையை வழங்கியது. இந்த அட்டவணையானது அனைத்து நாடுகளிலும் செயல்படுத்தப்படுகிறது. குழந்தைகளை தொற்றுநோய்களிலிருந்து பாதுகாப்பதற்காக எந்த வயது குழந்தைக்கு எந்த தடுப்பு மருந்தை வழங்குதல் வேண்டும் என்பதனை இந்த அட்டவணைச் சுட்டிக்காட்டுகிறது.**

162) தட்டம்மைக்கான தடுப்பு மருந்து குழந்தையின் எத்தனையாவது மாதத்தில் வழங்கப்படுகிறது?

**A) 9–12**

B) 18–24

C) 15 மாதங்கள் முதல் 2 வருடங்கள்

D) 2–3 வருடங்கள்

**விளக்கம்: தட்டம்மைக்கான தடுப்பு மருந்து குழந்தையின் 9–12வது மாதங்களில் வழங்கப்படுகிறது.**

**163) வாய்வழி போலியோ குழந்தைக்கு எப்போது வழங்கப்படுகிறது?**

**A) 15ஆம் நாளில்**

B) 6வது வாரம்

C) 10வது வாரம்

D) 14வது வாரம்

**விளக்கம்: குழந்தையின் 15–ஆம் நாளில் வாய்வழியே போலியோ மருந்து வழங்கப்படுகிறது. பின் 18–24வது மாதங்களில் போலியோ மற்றும் டிபிடீ தடுப்பு மருந்து வழங்கப்படுகிறது.**